www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மே - 2002
ம.க.இ.க மாத இதழ்
ரூ 5.00



குஜராத்:
ஆர்.எஸ்.எஸ்
மட்டும்தான்
குற்றவாளியா?




# மே தினம்
## கொண்டாட்டமல்ல
## போராட்டம்!

படிப்பகம்

www.padippakam.com

# குட்டிச் சுவர்

எந்த வேலைக்கும் பயன்படாமல் வீணாய் இருப்பவர்களைப் பார்த்து குட்டிச்சுவர் என்று சொல்லாதீர்கள். ஏனென்றால் குட்டிச் சுவர்கள் வீணாய் இருக்கவில்லை. விவரமாக எதையாவது உங்களிடம் பேசிக் கொண்டுதானிருக்கின்றன. ஒரு கரிக் கட்டை இருந்தால் போதும். மக்களுக்கானப் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் பொது மேடையாகச் சுவர்களைப் பயன்படுத்தலாம் என்ற நிலை மாறி குட்டிச் சுவர்கள் இப்பொழுது சில தனிநபர்களின் உடைமைகளாகவே மாறிக் கொண்டிருக்கின்றன.

''பொதுத் துறையை தனியார்மயமாக்காதே, உலக வர்த்தகக் கழகத்திலிருந்து இந்தியாவே வெளியேறு'' என மக்களுக்கான அரசியல் முழக்கங்களை எழுதுவோமென ரோட்டுக்கு வந்தால் அதை எழுதுவதற்கோ சுவர்கள் காலியாக இல்லை. ஒரு நூறு அடி சுவரில் வெறும் 'அம்மா' என்ற வாசகம் மட்டும் நீண்டு கிடக்கிறது. அடுத்து அணில், ஆடு என்ற ஆரம்பப் பாடம் இருக்குமென்று நீங்கள் அருகில் போனால் ஏமாந்து போவீர்கள். அம்மாவை பல வண்ணத்தில் குழைத்த வட்டச் செயலாளரின் பெயர் வட்டத்தில் இருக்கிறது. இன்னொரு பக்கம் திரும்பினால் ஒரு பெரிய சுவர் முழுக்க டாக்டர் கலைஞர் என்ற பெயரை நாம் சைக்கிள் எடுத்துப்போய்ப் படிக்க வேண்டியிருக்கிறது.

திராவிடக் கட்சிகளுக்கு மட்டுந்தான் தெரியுமா? நாங்கள் என்ன ஏப்பை சாப்பையா என்று இன்னொரு பக்கத்தில் மூர்த்தியார், திருமாவளவன், லெமூரியன் என்று தலித் தளபதிகளும், டாக்டர் இராமதாஸ் வகையறாக்களும் தங்களது பெயர்களை மட்டுமெழுதி பிரம்மாண்டம் காட்டுகிறார்கள். சுவர் முழுக்க வெறும் 'பெப்ஸி', 'கோக்' என்று எழுதுவதுபோல இந்தத் தனிநபர்களும் தங்களது பெயர்களை மட்டும் ஒரு 'பிராண்டை'ப் போல விற்றுக் கொள்கிறார்கள்.

அரசியல்வாதிகளே இப்படியெனில் சினிமாக் கழிசடைகளின் செயல்பாடுகளோ குட்டிச்சுவரே முட்டிக் கொள்ளும் அளவுக்குக் குமட்டுகிறது. பண்ருட்டி பஸ் ஸ்டாண்டில் புரட்சிக் கலைஞரின் ராஜ்ஜியம் என்பது மட்டுமே ஒரு உயரமான சுவரில் ஆக்கிரமித்திருக்கிறது. புரட்சிக் கலைஞரின் ராஜ்ஜியம் தமிழகத்தில் இஞ்சினியரிங் காலேஜ் தொடங்கும் வரை வந்துவிட்டாலும் அவரது சுவரில் போய் நாம் நம்முடைய பிரச்சினையை எழுதமுடியாது. ஆனால் பஸ் ஸ்டாண்ட், கல்லூரி வாசல், கக்கூஸ் என எல்லா இடத்திலும் புரட்சிக் கலைஞரின் ராஜ்ஜியம்தான். பக்கத்திலேயே முனியாண்டி விலாஸ் விபரப்பட்டியல்போல இதற்கு மூளையாயிருந்து வேலை செய்த கண்மணிகளின் பெயர்ப் பட்டியல்.

தஞ்சாவூர் பக்கந்தான் மலையே இல்லையே எப்படி இவ்வளவு கருங்கல்லையும் சாரங்கட்டிக் கொண்டு போனான் என்று மக்கள் ஆச்சர்யப்படுமளவு, திருத்துறைப் பூண்டி பக்கம் சுவரெழுத்து எழுத பிடிமானமே இல்லாத கோட்டூர் பாலத்தில் சாரங்கட்டி பாபா பட விளம்பரத்தால் ஆத்துப்பாலத்தையே துவைத்தெடுத்து விட்டார்கள் ரஜினி ரசிகர்கள்.

இது எவன் சுவரிலோ எவனோ எழுதிப் போகிறான் என்று விட்டுவிடக்கூடிய விசயமல்ல. இன்று நகரத்தில் மக்கள் பிரச்சினைக்காகச் சுவரெழுத்து எழுத சுவரே கிடைப்பதில்லை. வியாபார நிறுவனங்களும், சினிமாக் கம்பெனிகளும் அரசியல் தலைவர்களும் கூட நகரத்தின் முக்கியமான இடங்களில் நவீன முறையில் தங்களுக்கான பெரிய விளம்பரப் பலகைகளை அமைத்து வானத்தையும் பிடித்துக் கொள்கிறார்கள். சென்னையில் பஞ்ச தந்திரம் என்ற சினிமா விளம்பரத்துக்காக மாதம் ஐந்து இலட்சம் செலவு செய்து மிகப் பெரிய இடத்தைப் பிடித்திருக்கிறார்கள் சினிமா கழிசடைகள். இவை தவிர டி.வி. தனியார் சேனல்களை வாடகைக்கு எடுத்து தங்களை விளம்பரப்படுத்திக் கொள்கின்றன ஓட்டுக் கட்சிகள்.

மக்கள் பிரச்சினைகளை எளிமையாக மக்களுக்கு எடுத்துச் சொல்ல பலதரப்பட்ட மக்கள் இயக்கங்களுக்கு உள்ள மிக எளிமையான ஒரே வாய்ப்பு நகரத்துச் சுவர்கள்தான். அங்கும் நம்முடைய பிரச்சினைகளை — கல்வி உரிமை பறிக்கப்படுவது, ஆட்குறைப்பு, தனியார்மயம், வாழவே முடியாத அளவுக்கு நம்முடைய சகோதரர்களை நெருக்கும் பிரச்சினைகளைப் பற்றி எழுத இடமில்லாமல், வெறும் அம்மா, அப்பா, டாக்டர், ஐயா, அண்ணன் என்ற தனிநபர் துதிபாடும் அரசியல் விகாரங்களே ஒரு குட்டிச் சுவரையும் உங்களுக்கு விட்டுத் தர முடியாது எனக் கொக்கரிக்கின்றன. சுவரை மக்கள் பிரச்சினைகளுக்காகப் பயன்படுத்துவோரிடமிருந்து பறித்துக் கொள்ள அரசும் ஓட்டுக்கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

ஏழை எளிய மக்களுக்கும் அவர்களுக்குமான அரசியல் இயக்கங்களுக்குமிடையில் குறுக்குச் சுவரெழுப்பும் தனிநபர் விளம்பரங்களை அழித்தொழிக்க வேண்டிய தருணமிது. ஒன்றுக்கும் உதவாத இந்த அரசு அமைப்பை வீழ்த்துவதற்கான பிரச்சாரத்தில் சுவர்களையும் நம் பக்கம் பேச வைப்போம். சொல்லப்போனால் சுவர்கள் மரத்துப் போவதில்லை. அவை மீண்டும் மீண்டும் பேசுகின்றன. வெறும் பேச்சு மட்டுமா? வரலாற்றைக் கேளுங்கள், போராட்ட முழக்கங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் உதடுகளாக பிரெஞ்சுப் புரட்சியிலும், சீனப் புரட்சியிலும் குட்டிச் சுவர்கள் கூட குறிப்பிட்ட பங்காற்றி இருக்கின்றன. ரசிய புரட்சியில் ஸ்டாலின்கிராடு சுவர்கள் மக்கள் எதிரிகள் தம்மைத் தாண்ட விடாமல் வீழ்த்தின. நாம் முதலில் குட்டிச் சுவர்களில் குந்தியிருக்கும் மக்கள் எதிரிகளை வீழ்த்துவோம்.

● சுடர்விழி

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும் இதழின் தபால் உறையின் முகவரியில் சந்தா எண் குறிப்பிடப்பட்டிருக்கும். அதைப் பதிவு செய்து கொள்ளவும்.

1. இந்த இதழோடு (மே'2002) முடிவடையும் சந்தா எண்கள்:

**29,30,133,136,137,184, 185,186,187,188,190,194, 196,197,198,199,200,245, 369,371**

2. அடுத்த இதழோடு (ஜூன்'2002) முடியும் சந்தா எண்கள்:

**11,32,33,34,35,36,37,38, 39,40,43,47,126,138,192, 202,203,204,205,206,207, 208,209,210,211,212,213, 214,215,221,222,271**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 12
• மே - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகில்,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# இந்துத்துவம்: ஜெயலலிதாவின் பாணி

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, புதுதில்லி - ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் ஜெயலலிதா தேநீர் விருந்து நடத்தினார். அதோடு ஜெயலலிதா கட்சி, பாரதீய ஜனதா, கூட்டணி உறவு முறிந்து போனது; வாஜ்பாய் அரசு கவிழ்ந்து போனது. இப்போது சென்னை - மயிலை கபாலி கோவிலில், ஜெயலலிதா அன்னதான விருந்து வைத்தார். இதோடு ஜெயலலிதா கட்சி - பாரதீய ஜனதா கூட்டணி உறவு மீண்டும் மலர்ந்தது. வாஜ்பாய் அரசுக்கு மேலும் பலம் கூடியது.

இந்த அன்னதான விருந்தில் அரசியலோடு ஆன்மீகமும் கலந்திருப்பது பா.ஜ.க. உட்பட இந்துமதவெறியர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. ''அன்னதானம் என்பது இந்தப் பாரத நாட்டினுடைய பண்பாட்டின் ஒரு அம்சம்'' என்று உடனடியாகவே பாராட்டி வரவேற்றார் பயங்கரவாத அமைப்பான விசுவ இந்து பரிசத்தின் அகில உலகத் துணைத் தலைவர் வேதாந்தம். ''இத்திட்டம் புதிதல்ல. நமது தேசத்தின் கலாச்சாரத்தோடு, சிந்தனை முறையோடு கலந்து வந்துள்ள விசயம். காலங்காலமாக பாரத கலாச்சாரத்தில் அன்னதானத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் எல்லாக் கோயில்களிலும் காலங்காலமாக அன்னதானம் நடைபெற்று வந்திருக்கிறது. பிற மாநிலங்களின் பெரிய கோவில்களில் இப்போதும் நிர்வாகமே அதைச் செய்கிறது'' என்று ஆர்.எஸ்.எஸ்.சின் அதிகாரபூர்வ ஏடு ஏகத்துக்கும் புகழ்ந்து தள்ளுகிறது.

அந்தக் கட்சியுடன் உறவு, இந்தக் கட்சியுடன் நட்பு என்று பா.ஜ.க. அவ்வப்போது நிறத்தை மாற்றிக் கொண்டாலும் இந்து முன்னணி ராம. கோபாலன் அடிக்கடி கூறுவதைப் போல, 1991-இல் ஜெயலலிதா முதல்வரானதும் தமிழ்நாடு பிராமணாள் சங்கம் தீர்மானம் போட்டதைப் போல, ''இது நம்மவா ஆட்சி'' என்று வர்ண உறவுக்குரியவர், ஜெயலலிதா. அவர் அரசியலில் நுழையும் முன்பே கம்யூனிச எதிரி என்பதைக் காட்டிக் கொண்டவர். சோ, சங்கராச்சாரி, வெங்கட்ராமன் போன்றவர்களை அரசியல் வழிகாட்டிகளாக வைத்துக் கொண்டார். பதவிக்கு வந்ததும் ''நான் பாப்பாத்திதான்!'' என்று சட்டமன்றத்தில் பெருமை பொங்கக் கூறினார். கோவில்களில் ஆறுகால பூசை, வேதபாடசாலைகள் திறப்பு, ஆண்டு இலக்கு வைத்து குடமுழுக்குகள் நடத்தினார். ஆட்சியில் நீடிக்கவும் - ஆட்சி போனபிறகு எதிரிகளைப் பழிவாங்கவும், மீண்டும ஆட்சியைப் பிடிக்கவும் சிறப்பு யாகங்கள், பூசைகள் நடத்தினார்; அயோத்தி பாபரி மசூதி இடிப்பு கரசேவையை ஆதரித்து, அதற்காக ஆட்களையும் அனுப்பினார். அங்கு இராமன் கோவில் கட்டுவதை ஆதரிப்பவர்; குஜராத் கோத்ரா ரயில் எரிப்பு நிகழ்ச்சிக்கு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - வி.இ.ப. மனங்குளிர அறிக்கை வெளியிட்டார். இந்த வரிசையில் ''கோவில்களில் பக்தர்களின் வயிற்றுப் பசி தீர்க்க அன்னதானத் திட்டமும், சமய அறிவுப் பசி தீர்க்க சமய வகுப்பும்'' நடக்க ஏற்பாடு செய்துள்ளார்.

''இந்து ராஷ்டிரத்துக்கு'' மீண்டும் புத்துயிர் ஊட்டுவதற்கு அவர்கள் செய்யும் முயற்சிகள் இந்து மதவெறிப் பாசிசத்தையும், கூடவே ஒரு கழிசடைக் கலாச்சாரத்தையுமே பிரசவிக்கின்றன. அன்னதானத் திட்டமும் ஆன்மீக போதனையும் அப்படித்தான் ஆகிப் போயுள்ளன. ''ஒருவேளை கூட வயிறு நிரம்ப உணவு கிடைக்காத ஏழை எளிய மக்கள் இத்திட்டத்தால் பயன்பெறுவர்'' என்றார்கள். இதை நம்பி கோவில்களுக்கு வரும் ஏழை - வறிய பக்தர்கள் அடித்து விரட்டப்படுகிறார்கள். பிச்சையெடுக்கும் பெருமாளிடம் தட்டிப் பறிக்கும் அனுமார்களாகக் கோவில் கடைக்காரர்களும் கட்சிக்காரர்களும் பூசாரிகளும் அடையாள வில்லைகளைப் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். சாமிகளுக்கு படைக்கப்படும் படையல்களை பூசாரிகள் சுருட்டிக் கொள்வதைப் போலத்தான் இதுவும். பக்தர்களுக்கு ஆன்மீக போதனை என்று கூறினார்கள். அதுவும் பள்ளி மாணவர்களை விரட்டி வந்து கட்டாய மதப்பிரசங்கம் செய்வதாக மாறிப் போனது.

''பாரதக் கலாச்சாரத்தோடு, சிந்தனை முறையோடு கலந்திருந்த'' அன்னதானம் அவர்களே குறிப்பிடுவதைப் போல நடுவில் தொடராமல் நின்று போனது ஏன்? ''கிறித்தவ, இசுலாமிய வழிபாட்டுத் தலங்களை விட்டுவிட்டு இந்துக் கோயில்களை அரசாங்கமே எடுத்துக் கொண்டு இந்து அறநிலையத்துறை நிர்வகிப்பதாலேயே ஆறுகால பூசை, அன்னதானம், பிற கோவில் சொத்துக்கள், பராமரிப்பு எல்லாம் சீரழிந்துவிட்டன'' என்று இந்து மத வெறியர்கள் மீண்டும் மீண்டும் புளுகுகின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டும்தான் ''இந்து அறநிலையத் துறை'' என்ற அரசு நிர்வாக முறை உள்ளது. பிற மாநிலங்களில் கிடையாது; அப்படி இருக்கும் போது அங்கெல்லாம் கோவில்கள் சீரழிந்தது எதனால்? பார்ப்பனீய - சனாதன, வருணாசிரம தர்மம் ஆதிக்கம் வகுத்த மடங்களிலும், பீடங்களிலும், ஆதீனங்களிலும் எத்தகைய பூசைகளும், அன்னதானங்களும், சொத்துப் பராமரிப்புகளும், லீலைகளும் நடந்துவந்தன என்பதை வரலாறு அறியும். பெரியாரும், நாராயண குருவும், ஜோதிபாபூலேவும், அம்பேத்கரும் தோன்றுவதற்கு எது காரணமாக இருந்தது என்கிற கேள்விக்கு விடைகாண முற்பட்டாலே பாரதக் கலாச்சாரம், சிந்தனை முறையின் யோக்கியதை புரிந்து விடும்! ●

படிப்பகம்

www.padippakam.com




# குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச் சாலை

• மருதையன்

இந்து மதவெறியர்களின் கொடூரத் தன்மையைப் புரிய வைப்பதற்கு அவர்களுடைய இரக்கமற்ற கொலைவெறிக்கு ஆதாரமாகப் பல சம்பவங்களை எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. ஆனால் அவ்வாறு எழுதும்போதே ஒருவிதத் தயக்கமும் வந்துவிடுகிறது.

ஒரு கிரிமினலின் ரவுடித்தனங்களை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம்தான் மக்களுக்கு அவன்மீது வெறுப்பைத் தோற்றுவிக்க முடியும் என்பது சரிதான். ஆனால் வெறுக்கத்தக்க அந்தக் கிரிமினலை ஒழித்துக்கட்ட செயலில் இறங்காமல் அவனது அக்கிரமங்களை மட்டுமே பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தால், அந்த அக்கிரமங்களே அவனது பராக்கிரமமாகக் கருதப்பட்டு விடும். ரவுடியின் மீதான மக்களின் வெறுப்பு அவன் மீதான அச்சமாக மாறிவிடும்.

**கண்டனத்தால் பயன் என்ன?**

குஜராத் விவகாரத்தில் இப்போது நடந்து கொண்டிருப்பது அதுதான். ''மோடியை நீக்கு'' என்று வாஜ்பாயிடம் எதிர்க்கட்சிகள் மன்றாடினார்கள். ''நான்தான் மோடி'' என்று கோவாவிலிருந்து அறிவித்து விட்டது அந்த முகமூடி. இனி என்ன செய்வது?

ஏழு நாட்களாகப் பாராளுமன்றத்தில் அமளி. கடைசியில் சட்டப்பிரிவு 184-இன் கீழ் குஜராத் பிரச்சினையை விவாதித்தாகி விட்டது. எதிர்பார்த்த படியே தீர்மானம் தோற்றும் போய்விட்டது. ஒருவேளை தீர்மானம் வெற்றி பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? மோடியின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் அவ்வளவுதான்.

மக்களவையில் இந்தத் தீர்மானத்திற்கு எதிராகக் கூச்சல் போட்ட பாரதீய ஜனதா கட்சி மாநிலங்களவையில் தலைகீழாய்த் திரும்பி விட்டது. தீர்மானத்தை எல்லோரும் சேர்ந்து ஒருமனதாக நிறைவேற்றி விடலாம் என்று முன் மொழிந்த ஜஸ்வந்த் சிங் இவ்வாறு கூறினார்:

''எதிர்க்கட்சியினரின் உணர்வுகளை அரசு முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறது. தீர்மான வாசகங்களில் கூட எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. எல்லோரும் அம்மணமாகக் குளியலறையில் நின்று கொண்டிருக்கிறோம். ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுகளை வீசி என்ன பயன்?'' என்றார். மாநிலங்களவையில் பெரும்பான்மை இல்லாததால் பாரதீய ஜனதா மேற்கொள்ளும் தந்திரம் என்று எதிர்க்கட்சியினர் சமாளிக்கலாம்.

''கண்டனம் தானே, தெரிவித்து விட்டால் போச்சு'' என்ற நக்கலான அலட்சியம் தான் இதில் முக்கியமானது. என்ன பெரிய கண்டனம்? அந்தக் கண்டனத் தீர்மானக் காகிதம் மலம் துடைப்பதற்கு வேண்டுமானால் மோடிக்குப் பயன்படலாம்.

யார் மோடியைக் கண்டிக்கவில்லை? தேசிய மனித உரிமைக் கமிசன், ஐரோப்பிய நாடுகள், பத்திரிகைகள்... எல்லோரும் கண்டித்து விட்டார்கள். உச்ச நீதிமன்ற நீதிபதியின் விசாரணை கேட்கின்றன எதிர்க்கட்சிகள். ஏற்கனவே போட்ட விசாரணைக் கமிசன்கள்


படிப்பகம்

www.padippakam.com

உற்பத்தி செய்த காகிதக் கட்டுகளுடன் மேலும் சில டன் காகிதக் கட்டுகள்!

சட்டபூர்வமான நடவடிக்கைகள், விசாரணைகள், வழக்குகள் ஆகிய அனைத்தையும் நிராகரிப்பதற்கோ ஏளனம் செய்வதற்கோ இதைச் சொல்லவில்லை. மதச்சார்பற்ற அறிவு ஜீவிகளும், மனித உரிமை அமைப்புகளும் குஜராத்தில் ஆற்றிவரும் பணி அவசியமானது; மதிக்கத்தக்கது என்பதில் ஐயமில்லை.

### கொலைகள் தொடர்கின்றன

தங்களை அரசியல் கட்சிகள் என்றும் கோடிக்கணக்கான உறுப்பினர்களைக் கையில் வைத்திருப்பவர்கள் என்றும் கூறிக் கொள்ளும் எதிர்க்கட்சிகள் செய்தது என்ன என்பதுதான் நம் கேள்வி. இத்தனைக் கண்டனங்களுக்குப் பிறகும், உலகமே காறி உமிழ்ந்த பிறகும் குஜராத்தில் படுகொலைகள் அன்றாடம் தொடர்கின்றன. இதுவரை படுகொலை நடக்காத மாவட்டங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு இலக்குகள் போலப் படுகொலை இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

அகதி முகாம்களிலிருந்து வீடு திரும்ப முயன்ற முசுலீம் மக்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள். அகதிகளின் எண்ணிக்கை கூடுகிறது. மோடி அரசோ அகதி முகாம்களை நடத்துபவர்கள் மீது கலவரம் செய்ததாகப் பொய் வழக்குப் போடுகிறது. அகதி முகாம்களை இழுத்து மூடுவதன் மூலம் 'சகஜ நிலை' திரும்பி விட்டதாக நிரூபிக்க முயல்கிறது. வீடும் இல்லை முகாமும் இல்லையென்றால் உயிர் பிழைப்பது எப்படி என்று தவிக்கிறார்கள் முசுலீம் மக்கள்.

''குஜராத்தில் தேர்தல் நடத்திப் பார்ப்போமா'' என்று முண்டா தட்டுகிறது மோடி அரசு. பத்திரிகைகளை மிரட்டித் தீர்மானம் போடுகிறது பாரதீய ஜனதா. மத நல்லிணக்கக் கூட்டம் என்ற பெயரில் கூட குஜராத்தில் கூட்டம் நடத்த முடியவில்லை. சபர்மதி ஆசிரமத்துக்குள்ளே புகுந்து தாக்குகிறார்கள் ஆர்.எஸ்.எஸ். காலிகள்.

சிறிய மனித உரிமை அமைப்புகளும், தனிநபர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்துக் களத்திலிறங்கி வேலை செய்யும்போது காங்கிரஸ் என்ன செய்கிறது? சென்ற ஆண்டு குஜராத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் 70 சதவீத இடங்களைக் கைப்பற்றிய காங்கிரசு, மோடிக்கெதிராக ஒரு பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை அகமதாபாத்தில் நடத்தியிருக்கலாமே!

காங்கிரசு, முலாயம், லல்லு, மார்க்சிஸ்டுகள் ஆகிய அனைவரும் இணைந்து இலட்சக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி அறவழியில் - அமைதி வழியில் - காந்திய வழியிலாவது டெல்லி பாராளுமன்றத்தை முற்றுகையிட்டிருக்கலாமே! குஜராத் படுகொலைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கலாமே!



**அரசியல் சட்டம், மரபுகள், நெறிமுறைகள் ஆகிய அனைத்தையும் தூக்கியெறிந்து விட்டு, கையில் கத்தியுடன் தெருச் சண்டைக்கு அழைக்கிறார்கள் இந்து மதவெறியர்கள். 'மதச்சார்பற்ற' சூரப்புலிகளோ ''அடிப்பியோ ங்கொப்பம்மவனே சிங்கம்டா'' என்று பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் சவால் விடுகிறார்கள்.**

ஏப்ரல் 17-ம் தேதியன்று 'மக்கள் முன்னணி சார்பில் டில்லியில் இவர்கள் நடத்திய மாபெரும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் வெறும் 7000 பேர். டில்லியிலிருந்து கூப்பிடு தூரத்தில் உள்ள முலாயம் சிங்கின் 'கோட்டை'யான உத்திரப் பிரதேசத்திலிருந்து யாரும் வரவில்லையாம்!

பாராளுமன்றத்தில் இந்த அமர்க்களம் நடக்கும் அதே நேரத்தில் சந்திரசேகர் 75-வது பிறந்தநாள் விழா கொண்டாடுகிறார். அரசு புறம் போக்கை ஆக்கிரமித்து கட்டிய அந்தப் பண்ணை வீட்டில் வாஜ்பாயி முதல் மார்க்சிஸ்டுகள் வரை அனைவரும் ஆஜர்!

அடுத்த நாள் உமாபாரதியை நாஜிகளுடன் ஒப்பிட்டு பாராளுமன்றத்தில் கண்டித்துப் பேசுகிறார் சந்திரசேகர். தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., தெலுங்கு தேசம், திருணமுல் போன்றோர் குஜராத் கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கத் தவறியதால் அவர்கள் இன்று மதவெறியின் கையாட்கள்; நாளையே வேறு ஏதாவது காரணத்திற்காக இந்தப் பிழைப்புவாதிகள் ஓட்டை மாற்றிப் போட்டால் மீண்டும் மதச்சார்பற்ற சக்திகளாக அவதாரம் எடுத்துவிடுவார்கள்.

பாரதீய ஜனதாவின் இந்து பாசிசத்தையோ அதன் கூட்டாளிகளின் குற்றத்தையோ மக்கள் மத்தியில் அம்பலப் படுத்தவோ, எதிர்த்துப் போராடவோ கூடாது என்ற கொள்கையில் 'எதிர்' கட்சிகள் தெளிவாக இருக்கின்றன. ஆனால் இந்த பாராளுமன்ற நிழற்சண்டையைக் கூட சகித்துக் கொள்ள முடியாது என்று எச்சரிக்கிறது பா.ஜ.க. தலைமை. ''இந்த அவதூறுகளையும், மிகைப்படுத்தப்பட்ட தாக்குதலையும் எதிர்க்கட்சிகள் உடனே நிறுத்திக் கொள்வது நல்லது. நாங்கள் வேலையைக் காட்டத் தொடங்கினால் உங்களால் பாராளுமன்றத்தில் உட்காரக்


படிப்பகம்

www.padippakam.com

கூட முடியாது'' என்று மிரட்டுகிறார் ஜனா. கிருஷ்ணமூர்த்தி.

அரசியல் சட்டம், மரபுகள், நெறி முறைகள் ஆகிய அனைத்தையும் தூக்கி யெறிந்து விட்டு, கையில் கத்தியுடன் தெருச் சண்டைக்கு அழைக்கிறார்கள் இந்து மதவெறியர்கள். 'மதச்சார்பற்ற' சூரப்புலிகளோ ''அடிப்பியோ ங்கொப் பம்மவனே சிங்கம்டா'' என்று பாராளு மன்றக் கட்டிடத்துக்குள் சவால் விடுகி றார்கள். மிஞ்சிப் போனால் சபாநாயகர் இருக்கையை நோக்கி முன்னேறுகி றார்கள். பிறகு உட்கார்ந்து கொள்கி றார்கள்.

**கோழைத்தனம்**

இவர்களுடைய சலிப்பூட்டும் இந்தக் கோழைத்தனம் தனிப்பட்ட நபர்களின் கோழைத்தனம் மட்டு மல்ல, இந்து மதவெறிக்கு எதிராக 'இந்துக்களை'த் திரட்ட முடியாத அவர்களது அரசியல் கோழைத் தனம். ''அரசியலிலிருந்து மதத்தைத் துரத்துதல்'' என்ற உண்மையான மதச்சார்பின்மைக் கோட்பாடுக்குப் பதிலாக, ''எல்லா மதங்களையும் சமமாகப் பாவித்தல்' என்ற மோசடியான மதச்சார்பின்மைக் கொள்கை தோற்றுவித்த கோழைத்தனம். இட ஒதுக்கீட்டு அரசியலால் பார்ப்பனி யத்தை வீழ்த்தி விடலாமென்ற பிழைப்புவாத அரசியல் தோற்று வித்த கோழைத்தனம். தங்களது தேர்தல் ஆதாயத்திற்காக மதவெறி யர்களோடு மதவெறி ஆதரவுக் கட்சிகளோடும் அவ்வப்போது செய்து கொள்ளும் சமரசத்தால் வந்த கோழைத்தனம். மதவெறிக் குண்டர் படையை எதிர்கொள்ள மதச்சார்பற்ற தொண்டர் படை யொன்று இல்லாததால் வந்த கோழைத்தனம். முசுலீம் மக்களைக் கொலை செய்வது என்ற ஒரு விச யத்தைத் தவிர மற்றெல்லா அர சியல் பொருளாதாரப் பிரச்சினைக ளிலும் பாரதீய ஜனதாவுடன் கொள்கை ரீதியாகவே ஒத்துப் போவ தனால் வந்த கோழைத்தனம்.

''என்னதானிருந்தாலும் இப்போ தைக்கு பாரதீய ஜனதாவுக்கு மாற்று இந்த எதிர்க்கட்சிகள்தான்; பாதிக்கப்பட்ட குஜராத் முசுலீம் மக்களுக்கு ஏதாவது நியாயம் கிடைக்கச் செய்வதற்கு இவர்க ளால்தான் முடியும்'' என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் எதிர்க்கட்சிகள் மீதான இத்தகைய விமரிசனங்களைக் கண்டு எரிச்சல் அடையலாம்.

இந்த நம்பிக்கைக்கு எந்தவிதமான அடித்தளமும் கிடையாது என்பது ஒருபுற மிருக்க, பாதிக்கப்பட்ட குஜராத் முசுலீம் மக்களுக்கு அத்தகைய நம்பிக்கை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

**ஒரு முன்னாள் கொலைகாரனின் வாக்குமூலம்**

1984 டெல்லி சீக்கியர் படுகொ லையைத் தொடர்ந்து பஞ்சாபில் வேக மாகப் பரவிய சீக்கியத் தீவிரவாதத்தை நசுக்குவதற்காக நியமிக்கப்பட்ட போலீசு அதிகாரி ரிபைரோ குஜராத் படு கொலையைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:



சமூகம், அரசியல், பண்பாடு ஆகிய தளங்களில் படிப்படியாக ஏற்பட்ட என்ன வகையான மாற்றங்களும், அணிசேர்க்கை களும் பாரதீய ஜனதா என்ற பாசிஸ்டு கட்சியை குஜராத்தில் சட்டபூர்வமாக ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனவோ, அவற்றின் சட்டவிரோதமான வெளிப் பாடுதான் இந்த இனப்படுகொலை.

''ஷா ஆலம் முகாமிலிருந்த அகதிக ளுடன் பேசியபோது நான் கவனித்த முதல் விசயம் என்னவென்றால் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்கள் முற்றிலுமாக இழந்து விட்டார்கள். அநேகமாக எந்தக் கலவரத் திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்ததில்லை; என்றாலும் கொஞ்சம் நம்பிக்கை மிச்சமிருக்கிறது.''

''அந்த நம்பிக்கையும் போய்விட்டால் பிறகு வேறெதுவும் மிச்ச மில்லை. கிரிமினல் நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாதம்தான் பாதிக்கப் பட்டவர்களின் புகலிடம்....''

''தாங்கள் அனுபவித்த கொடுமை களை விவரிக்கும்போது அவர்கள் அழு வார்கள் கதறுவார்கள் என்று நான் எதிர் பார்த்தேன். ஆனால் தங்கள் கண்ணால் கண்ட கொடூரங்களை விவரித்த சிறுவர் களும் பெண்களும் உணர்ச்சியற்ற குரலில் பேசியதைக் கண்டபோது நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். தங்க ளுக்கு இழைக்கப்பட்ட அநீதியை இந்த இளைஞர்கள் மறக்கப் போவதில்லை. இது எனக்குப் பெரிதும் கவலையளிக்கி றது...''

ரிபைரோ அனுபவசாலி. பஞ்சாபில் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் நர வேட்டையாடி பிறகு பணியிலிருந்து ஓய்வு பெற்ற வுடன் உயிருக்குப் பயந்து ஐரோப் பாவில் குடியேறியவர். அவர் இறு தியாகக் கூறுவதைக் கேளுங்கள்:

''குஜராத்திலுள்ள இந்து நடுத்தர வர்க்கத்தினரது சிந்தனையில் வகுப்புவாத நஞ்சு வெகு ஆழமாக ஊடுருவியிருக்கிறது. இதுதான் எனக்கு மிக முக்கியமாகக் கவலை தருகிறது. இந்த வகுப்புவாத நஞ்சை அவர்களுடைய சிந்தனை யிலிருந்து வெளியேற்ற வேண்டு மென்றால் மனித சக்திக்கு மீறிய முயற்சிகள் தேவை. அதற்குப் பிறகுதான் மத நல்லிணக்கத்தின் சாயலையாவது அங்கே காண முடியும்.''

**எது சுலபம்?**

''இந்துக்களின் மனதிலிருந்து வகுப்புவாதச் சிந்தனையை வெளி யேற்றுவது'' ''முதல்வர் பதவியிலி ருந்து மோடியை வெளியேற்று வது'' - ஆகிய இரண்டில் எது சுலப மானது என்பதை வாசகர்களுக்கு விளக்கத் தேவையில்லை.

இந்துக்களின் மனதிலிருந்து வகுப்புவாதச் சிந்தனையை வெளி யேற்ற வேண்டுமானால், அத்தகைய முயற்சியில் ஈடுபடும் கட்சியிடம் உண்மையான மதச்சார்பற்ற கொள்கை இருக்க வேண்டும். அதன் அடிப் படையில் உருவாக்கப்பட்ட தொண்டர்கள் வேண்டும்; அமைப்பு வேண்டும்; அத்தகைய நடைமுறை வேண்டும்; படுகொலை நடந்த குஜ ராத்தில் இந்துக்களை நேருக்கு நேர் நின்று இடித்துரைக்கும் துணிவு வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

மோடியை வெளியேற்றுவதற்கோ இவையெதுவும் தேவையில்லை. பாரா ளுமன்றத்தில் சவடால், பத்திரிகைக ளுக்கு அறிக்கை, காந்தி சிலைக்குக் கீழே ஒரு அடையாள உண்ணாவிரதம், பாரதீய ஜனதா கூட்டணியில் இருக்கும் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற 'மத வெறியில்லாத' பதவி வெறியர்களைக் கவரும் முயற்சி- போன்ற நடவடிக் கைகள் போதும். சொல்லப்போனால் இந்தப் பம்மாத்துக்களால் மோடியின் ஒரு முடியைக் கூட இவர்களால் இது வரை வெளியேற்ற முடியவில்லை என்பதே உண்மை.

**மோடி** என்ற அந்தக் கொலைகாரன் யார்? குஜராத் மக்கள் ஆழ்ந்த நித்தி ரையில் இருக்கும்போது முதல்வர் நாற்கா லியைக் கைப்பற்றிவிட்ட சாகசக்காரனா? பெரும் பான்மை இந்துக்கள் தடுத்தும் கேட்காமல் இந்த இனப்படுகொலையை நடத்திவரும் குற்றவாளியா?

**இந்துக்களின் பங்கு என்ன?**

இந்த இனப்படுகொ லையை முன் நின்று நடத் தியவன் மோடி என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவிற்கு அதைப் பின் நின்று ஆதரித்த வர்கள் பெரும்பான்மை இந்துக்கள் என்பதும் உண்மை. சில விதி விலக் குகள் இருக்கலாம். 'விலக்குகளை' எண்ணிப் பெருமை கொள்வதைக் காட்டிலும் 'விதி'யை எண்ணிக் கவலை கொள்ள வேண்டிய தரு ணமிது.

ஈழத் தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் நடத்திய படு கொலையோ, யூதர்கள் மீது நாஜிக்கள் நடத்திய படுகொலையோ, பாலஸ்தீன மக்கள் மீது யூத வெறியர்கள் நடத்தும் படுகொலையோ எதுவானாலும் அந்தந்தப் பெரும்பான்மை இனத்தின் ஆதரவோ, மவுனமான தலையசைப்போ இல்லாமல் நடக்கவில்லை.

இத்தகைய கோரமான படுகொ லைக்குப் பின்னரும் குஜராத்தின் 'இந்து மனசாட்சி' அதிர்ச்சிக்கோ, குற்றவுணர் வுக்கோ ஆளாகவில்லை என்பதை உறுதி செய்து கொண்டதனால்தான் ''தேர்தல் நடத்திப் பார்ப்போமா?'' என்று மோடியால் சவால்விட முடிகிறது.

சமூகம், அரசியல், பண்பாடு ஆகிய தளங்களில் படிப்படியாக ஏற்பட்ட என்ன வகையான மாற்றங்களும், அணி சேர்க்கைகளும் பாரதீய ஜனதா என்ற பாசிஸ்டு கட்சியை குஜராத்தில் சட்டபூர் வமாக ஆட்சியில் அமர்த்தியிருக்கின்ற னவோ, அவற்றின் சட்டவிரோதமான வெளிப்பாடுதான் இந்த இனப்படு கொலை. அதிகாரவர்க்கத்தின் ஆதரவும் போலீசின் ஒத்துழைப்பும் இந்த இனப்ப டுகொலையின் தூண்டுகோல்களே யன்றித் தோற்றுவாய்களல்ல.

குஜராத் காவல்துறை இதுவரை பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கைகளின் படி கொலை கொள்ளை கற்பழிப்பில் ஈடு பட்ட 'ஹிந்துக்களின்' எண்ணிக்கை இரண்டு லட்சம் என்று கூறுகிறது ஒரு பத்திரிகைச் செய்தி. இந்த இனப் படுகொ லையை ஒரு மாபெரும் இந்து எழுச்சி யாகச் சித்தரிக்கும் நோக்கத்துடனும், குறிப்பான குற்றவாளிகளை அடை யாளம் காண முடியாமல் மறைப்பதற்கா கவும் பார்ப்பன நரிகள் வேண்டுமென்றே எண்ணிக்கையைக் கூட்டிக் காட்டியிருக் கலாம்.

**சோதனைச் சாலை?**

இருப்பினும், இனப்படுகொலை நடந்த இடங்களிலெல்லாம் பல்லாயிரக் கணக்கானவர்கள் கும்பல் கும்பலாக இதில் பங்கேற்றிருக்கிறார்கள். பார்ப்பன, பனியா, படேல் போன்ற ஆதிக்கச் சாதி யினர் தலைமையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் உள்ளிட்ட எல்லாச் சாதி களையும் சேர்ந்த கிரிமினல்கள் முசுலீம் மக்களின் இரத்தத்தில் கை நனைத்திருக்கி றார்கள்.

சாண்ட்ரோ காரிலிருந்து இறங்கி நகைக்கடையில் நெக்லஸ் திருடிய மாமிகள் முதல், லாரிகளிலிருந்து குதித்து ஏழை முசுலீம்களின் வீட்டில் அகப்பட் டதைச் சுருட்டிய கூலிப் படையினர் வரை எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த கிரிமி னல்கள் முசுலீம் மக்களைக் கொள்ளைய டித்திருக்கிறார்கள்.




''காந்தி பிறந்த மாநிலத்திலா இப்படி?'' என்று அங்கலாய்ப்பவர்கள் காந்தியையும் புரிந்து கொள்ள வில்லை, குஜராத்தையும் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் நாம் சொல்லமுடியும்.

''குஜராத் - இந்துத்துவத்தின் சோதனைச் சாலை'' என்று ஆர்.எஸ்.எஸ். கும்பல் கூறுவதை, வெறும் முசுலீம்களுக்கு எதிரான பிரகடனமாக மட்டும் புரிந்து கொள்ளக் கூடாது. ஆதிக்க சாதிகள் மற்றும் ஆளும் வர்க்கங் களின் தலைமையின் கீழ் ஒடுக்கப்பட்ட சாதிக ளையும் வர்க்கங்களை யும் ''இந்து ஒற்றுமை'' என்ற பெயரில் திரட்டியி ருப்பதுதான் இந்தச் சோதனைச் சாலை நமக் கெல்லாம் விடுத்தி ருக்கும் அபாய எச்ச ரிக்கை!

இன்று முசுலீம் மக்களைக் குறிவைத்து ஏவப்பட்டுள்ள இந்தப் பாசிச வன்முறை உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராகவும் ஒடுக்கப் பட்ட சாதியினர்க்கு எதி ராகவும் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திக ளுக்கு எதிராகவும் இரக்கமின்றி ஏவப் படும். எனவே குஜராத் இந்துமதவெறி யர்களின் சோதனைச் சாலையாக மாற்றப் பட்டதெப்படி என்பதைப் புரிந்து கொண்டோமானால் தமிழகத்தில் அத்த கையதோர் நிலை ஏற்படாமல் நாம் தடுக்க முடியும்.

''மாறாக, காந்தி பிறந்த மாநிலத்திலா இப்படி?'' என்று அங்கலாய்ப்பவர்கள் காந்தியையும் புரிந்து கொள்ளவில்லை, குஜராத்தையும் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் நாம் சொல்லமுடியும்.

— தொடரும்


படிப்பகம்

www.padippakam.com



இந்துத்துவத்தின் சோதனைச் சாலை:

# கலவரத்திலும் நால் வருண வேலைப்பிரிவினை

குஜராத் இனப்படுகொலையில் பார்ப்பன, பனியா, படேல் சாதியினர் மட்டுமின்றி கணிசமான அளவிற்கு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் ஈடுபட்டிருக்கின்றனர். இதெப்படிச் சாத்தியமானது என்பதை விளக்கி 'எகனாமிக் அண்டு பொலிடிக்கல் வீக்லி' இதழில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் ஆய்வாளர் கன்ஷியாம் ஷா.

நகர்ப்புறத்தில் நடைபெறும் இனப்படுகொலையை ஆர்.எஸ்.எஸ். எவ்வாறு திட்டமிட்டு நடத்துகிறது என்பதையும் 'கலவரத்தின் வேலைப் பிரிவினை'யையும் விளக்கும் வகையில் உள்ள ஒரு பகுதியினை மட்டும் அக்கட்டுரையிலிருந்து தந்துள்ளோம்.

பழங்குடி மக்கள் இதில் எவ்வாறு இறக்கிவிடப் பட்டார்கள் என்பதை விளக்கி **இந்து** நாளிதழில் (ஏப்ரல்-24) கல்பனா கண்ணபிரான் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகளையும் வெளியிட்டுள்ளோம். ஆர்.எஸ்.எஸ். கும்பலின் கலவரச் சதிகளைப் புரிந்து கொண்டு முறியடிக்க இவை பயன்படும்.

***

கலவரம் என்பது ஒரு கும்பல் நடவடிக்கை. இனப்படுகொலை அப்படிப்பட்டதல்ல. இருப்பினும் கும்பலின் ஆதரவு இல்லாமல் இனப்படுகொலையை நடத்த முடியாது. கும்பலின் எண்ணிக்கை 100 பேராகவும் இருக்கலாம்; 5000 பேராகவும் இருக்கலாம். கும்பலில் உள்ள அனைவரும் கொலை, கொள்ளை, தீவைப்பில் ஈடுபடுவதில்லை.

1969, 1973, 1992 ஆகிய ஆண்டுகளில் குஜராத்தில் நடைபெற்ற கலவரங்களை நான் ஆய்வு செய்திருக்கிறேன். கலவரக் கும்பல் என்பதில் நான்கு விதமான ஆட்கள் இருக்கிறார்கள்.

***முதல் பிரிவினர்*** திட்டம் வகுக்கின்ற அமைப்பாளர்கள். அநேகமாக இவர்கள் களத்தில் இருப்பதில்லை. எந்தப் பாதை வழியாகச் சென்று எந்தெந்த இடங்களைத் தாக்குவது என்பதை இவர்கள் வெகு நுட்பமாகத் திட்டமிடுகிறார்கள். ''தாக்கப்பட வேண்டிய முசுலீம்களின் பட்டியலை பிப்-28 காலையில் தயாரித்தோம்'' என்று விசுவ இந்து பரிசத் தலைவர்களே கூறியுள்ளனர். (விவரம் சென்ற இதழ் ***புதிய கலாச்சாரத்தில்*** வெளிவந்துள்ளது).

இந்த அமைப்பாளர்கள் எல்லாம் முக்கியமாக உயர்மட்டத் தலைவர்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் பார்ப்பனர்கள். இதில் மிக முக்கியமான விசயம் என்னவென்றால் இவர்களனைவரும் பார்ப்பனியத்தின் நால்வருணக் கோட்பாட்டில் தீவிர நம்பிக்கை உடையவர்கள்.

***இரண்டாவது பிரிவினர்*** தொழில் தேர்ச்சியும் அனுபவமும் கொண்ட படையாட்கள். கதவுகள் - ஷர்ட்டர்களை உடைப்பது, கட்டிடங்களை நொறுக்குவது, மின்சாரச் சாதனங்கள் மூலம் தீ வைப்பது, வாள் வீச்சு, மனிதர்களை உயிருடன் எரிப்பது போன்ற செயல்களில் இவர்கள் கை தேர்ந்தவர்கள். இந்த முறை எரிவாயு சிலிண்டர்களையும் இரசாயனப் பொருட்களையும் இவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். தேவையான ஆயுதங்களுடன் 10 அல்லது 20 பேர் கொண்ட குழுவாக இவர்கள் இயங்குகிறார்கள்.

இத்தகைய குழுக்களின் தலைவர்கள் இந்துத்துவக் கொள்கையில் வெறித்தனமான பற்று கொண்டவர்கள். கொலை செய்யும் போதும் கொள்ளையடிக்கும் போதும் தங்களது மதக் கடமையை (தருமத்தை) நிறைவேற்றுவதாக நம்புபவர்கள். கிறித்தவ இசுலாமிய பயங்கரவாதிகளைப் போலவே இவர்களும் சிந்தனை ரீதியாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். தங்களுடைய சொந்தச் சாதி அடையாளமோ பிற அடையாளங்களோ இவர்களுக்குப் பொருட்டில்லை. எனினும் இவர்களில் பெரும்பான்மையினர் மேல்சாதி மற்றும் இடைநிலைச் சாதிகளைச் சேர்ந்தவர்கள்.

இந்தக் குழுவில் இவர்களைத் தவிர மற்றவர்கள் தொழில்முறைக் கிரிமினல்கள். இந்த கிரிமினல்களை ஏற்பாடு செய்வதும், கைது, வழக்கு போன்ற பிரச்சினைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதும் மேல்மட்டத் தலைவர்களான அமைப்பாளர்களின் வேலை.

இந்த இரண்டாவது பிரிவைச் சேர்ந்த கிரிமினல் ஒருவனை 1974-ல் சந்தித்தேன். அவன் 1969, 1973 கலவரங்களில் தீவிரமாக ஈடுபட்டவன். அவன் சொன்னான்:

''எல்லா வகையான தொழில்களையும் செய்து விட்டேன். பம்பாயிலிருந்து அகமதாபாத் வரை நான் போகாத சிவப்பு விளக்குப் பகுதி கிடையாது. சூதாட்டம்தான் எனக்கு இப்போது சோறு போடுகிறது... கொலை செய்வதில் எதுவும் தவறு இருப்பதாக நான்


படிப்பகம்

www.padippakam.com

நினைக்கவில்லை.''

நான் அவனைச் சந்தித்தபோது அவனுக்கு வயது 25. எம்.ஏ. (உளவியல்) பட்டதாரி. சாதியில் பனியா. அவனுடைய அப்பாவோ ஒரு பங்குச் சந்தைத் தரகன். இவன் ஜனசங்கக் கட்சியுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தான்.

இன்றோ வேலையில்லாத் திண்டாட்டம், அன்று இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகரித்து விட்டது. தொழிலாளிகளின் வேலை உத்திரவாதம் பறிக்கப்பட்டுத் தினக்கூலிகளாக்கப்படுவது, அரசியல் கிரிமினல்மயமாகி வருவது - ஆகிய காரணங்களால் இத்தகைய அடியாட்களின் எண்ணிக்கையும் குஜராத்தில் பெரிதும் அதிகரித்து விட்டது.

இத்தகைய நபர்கள் எல்லா சமூகப் பிரிவுகளிலிருந்தும் வருகிறார்கள். மேல்சாதி, இடைநிலைச் சாதி, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய எல்லாச் சாதிகளிலிருந்தும் வருகிறார்கள். குஜராத்திகள் மட்டுமல்ல, வெளிமாநிலங்களிலிருந்து குடியேறியவர்களும் கூலிப்படையாகிறார்கள்.

***மூன்றாவது பிரிவினர்*** மக்களுக்கு (இந்துக்களுக்கு) ஆத்திரத்தைத் தூண்டும் வேலையைச் செய்பவர்கள். வதந்திகளைப் பரப்பி விடுவது, கோஷம் போடுவது, கலவரக் கும்பலை அவ்வப்போது தூண்டி விடுவது, 'அதை அடி - இதை நொறுக்கு' என்று கை காட்டி விடுவது இவர்கள் வேலை.

சங்க பரிவாரத்தின் பல்வேறு அமைப்புகளிலும் தீவிரமாக வேலை செய்பவர்கள்தான் இதற்கு ஒதுக்கப்படுகிறார்கள். 50 பேர் கொண்ட கும்பலில் இத்தகைய ஆட்கள் 5 பேராவது இருப்பார்கள். கும்பல் பெரிதாகப் பெரிதாக இவர்களது எண்ணிக்கையும் கூடும். பல இடங்களில் தீவிர ஆர்.எஸ்.எஸ்.காரர்களான டாக்டர்கள், வக்கீல்கள் போன்றோரும் இந்தக் குழுவில் சேர்ந்து கொள்வார்கள்.

***நான்காவது பிரிவினர்*** - மற்றவர்கள். வெறி பிடித்த சூழ்நிலையில், ''நாம் யார் நமக்கும் இந்தக் கும்பலுக்கும் என்ன சம்பந்தம்'' என்றெல்லாம் யோசிக்காமல் கும்பலோடு கும்பலாகச் சேர்ந்து விடுபவர்கள். போலீசு தலையிடவில்லை என்று தெரிந்தால் இத்தகைய நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

தற்போதைய கலவரத்தில் இத்தகைய நபர்களை போலீசே முன்நின்று கொள்ளையடிப்பதற்குத் தூண்டிவிட்டிருக்கிறது. இத்தகைய நபர்கள் எல்லாச் சாதிகளையும் சேர்ந்தவர்கள். மேட்டுக்குடிப் பகுதி அல்லது நடுத்தரவர்க்கப் பகுதிகளில் இவர்கள் மேல்சாதி அல்லது இடைநிலைச் சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.



தொழிலாளி வர்க்கப் பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினரும் வெளிமாநிலங்களிலிருந்து குடியேறியவர்களும் இந்தக் கும்பலில் அதிகமாக இருப்பார்கள். இவர்களில் சிலர் கொள்ளை, கல்லெறி, தீ வைப்பு வேலைகளையும் செய்யக்கூடும். சில நேரங்களில் முசுலீம்களைத் தாக்குவதற்கும் சேர்ந்து கொள்வார்கள். ஆனால் அருவெறுக்கத்தக்க கொடூரமான செயல்களில் இவர்கள் அநேகமாக ஈடுபடுவதில்லை.

கும்பலோடு கும்பலாகச் சேர்ந்து கொள்ளும் இத்தகைய நபர்கள் அனைவருமே முசுலீம் மக்களைத் துவேசத்துடன் வெறுப்பவர்களாக இருப்பதில்லை.

எடுத்துக்காட்டாக பிப்ரவரி-28-ம் தேதி நரோடா பாட்டியா பகுதியில் கலகக் கும்பலுடன் சேர்ந்து கொண்ட சஞ்சய் என்பவரைச் சந்தித்தேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 38 வயதான நபர் சஞ்சய்.

முதலில் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்கப் போனாராம். முசுலீம் எதிர்ப்புக் கோஷங்களைக் கத்திக் கொண்டு மசூதி மீதும், முசுலீம் சேரியினர் மீதும் ஒரு கும்பல் கல்லெறிந்து கொண்டிருந்ததாம். கோத்ராவில் 'நம்ம' ஆட்களை எரித்து விட்டார்கள் என்ற ஆத்திரம் தனக்கும் இருந்ததால் கும்பலோடு சேர்ந்து கொண்டு மசூதியின் மீது இவரும் கல்லெறிந்தாராம்.

ஆனால் இதே மனிதர் அடுத்த 3 மணி நேரத்தில், 15 முசுலீம்களைக் காப்பாற்றியது மட்டுமில்லாமல், மூன்று நாட்களுக்கு அவர்களைப் பாதுகாத்துமிருக்கிறார். அபாயகரமான இந்தக் காரியத்திற்கு அவரது பக்கத்து வீட்டுக்காரர்களும் உதவியிருக்கின்றனர்.

இன்னொரு உதாரணம் பரோடாவைச் சேர்ந்த ரமேஷ் என்ற 18 வயது 'மேல்' சாதிப் பையன். தெருவில் ஒரு கும்பல் நிற்பதை இவன் பார்த்திருக்கிறான். என்ன ஏதேன்று வேடிக்கை பார்ப்பதற்காகக் கிட்டப் போனால், அங்கே அவனுடைய நண்பர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கிறார்கள். யார் இந்த பாட்டில் குண்டுகளையெல்லாம் தயார் செய்து கொடுத்தார்கள் என்பதெல்லாம் ரமேஷுக்குத் தெரியவில்லை.

கும்பலில் நின்று கொண்டிருந்த ரமேஷின் பக்கத்து வீட்டுக்காரன் இவன் கையிலும் ஒரு

> ''முசுலீம்களுக்கு எதிரான வன்முறையில் ஒடுக்கப்பட்ட சாதியினரை ஆர்.எஸ்.எஸ் பயன்படுத்திக் கொண்டது'' என்ற கோணத்திலிருந்து மட்டும் இப்பிரச்சனையைப் பரிசீலித்தால், கொலை கொள்ளையில் ஈடுபட்ட அனைவரையும் அப்பாவிகள் என்றோ ஏமாளிகள் என்றோ கூறி குற்றத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டிவரும்.


படிப்பகம்

www.padippakam.com

குண்டைக் கொடுத்து எறியச் சொல்லியிருக்கிறான். இவனும் அதை வாங்கி எறிந்திருக்கிறான்.

பக்கத்துத் தெருவிலுள்ள முசுலீம்களைக் கொலை செய்வதற்குத்தான் குண்டெறிந்திருக்கிறோம் என்று புரிந்த பிறகு பெரிதும் வருந்தியிருக்கிறான். உடனே, ஊரடங்கு உத்தரவைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் எந்தத் தெருவை நோக்கிக் குண்டெறிந்தானோ அதே முசுலீம் தெருவுக்குத் தன் தம்பியையும் அழைத்துக் கொண்டு கிளம்பிப் போயிருக்கிறான் ரமேஷ். ஏன் தெரியுமா? தங்களுக்கு ரொம்பப் பிடித்தமான கரீம் சாச்சா என்ற பெரியவருக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாதே என்ற கவலை இரண்டு பேருக்கும்!

''என்னுடைய முசுலீம் நண்பர்கள் நல்லவர்கள்; இருந்தாலும் முசுலீம் சமூகத்தினர் மோசமானவர்கள், நம்பத்தகாதவர்கள்'' - இப்படித்தான் நாங்கள் சந்தித்த பலரும் கருத்துத் தெரிவித்தனர். இந்துத்துவ சக்திகளின் பிரச்சாரத்திற்குப் பலியாகிவிட்டபடியால் வதந்திகளைத் தங்கள் சொந்த அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்ளும் ஆற்றலைக்கூட இவர்கள் இழந்துவிட்டார்கள்.

***


குஜராத்தின் நகர்ப்புறங்களில் நடந்த வன்முறைக்கும் கிராமப்புறங்களில் நடந்த வன்முறைக்கும் வேறுபாடு இருக்கிறது. குறிப்பாக குஜராத்தின் கிழக்குப் பகுதியில் கொள்ளை, தீவைப்பு ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் பழங்குடி மக்கள்.

சோட்டா உதய்பூர் என்ற நகரத்தைச் சுற்றிலுமுள்ள 48 கிராமங்களும் வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இரண்டு கிராமங்களுக்குச் சென்றோம். பல கிராமங்களைச் சேர்ந்த மக்களையும் சந்தித்தோம்.

பன்வாட் கிராமத்தின் மக்கள் தொகை 11,000. இதில் முசுலீம்கள் 1000 பேர். முசுலீம், பனியா, லோகார் போன்ற பல பிரிவினரும் இருந்தாலும் கிராமத்தில் பெரும்பான்மையினர் பழங்குடி மக்கள்தான். லாரி, வேன் வாடகைக்கு விடுவது, செங்கல் சூளை, விவசாயம் ஆகியவை முசுலீம்களின் தொழில்கள்.

தாக்குதலை எதிர்பார்த்து பிப்ரவரி - 28-ம் தேதியே முசுலீம் மக்கள் வீட்டைவிட்டுப் பாதுகாப்பான இடமொன்றில் குவியத் தொடங்கி விட்டார்கள். ஆனால் தாக்குதல் மார்ச் 10ம் தேதிதான் தொடங்கியிருக்கிறது. அன்றுதான் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து பழங்குடியினர் வரத் தொடங்கியிருக்கின்றனர். சூறையாடலையும் தீவைப்பையும் தலைமை தாங்கி வழிகாட்டி நடத்தியவர்கள் உள்ளூரைச் சேர்ந்த பழங்குடியினர் அல்லாத வேறு சாதித் தலைவர்கள். எல்லாவற்றையும் போலீசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததால் வேறு வழியில்லாமல் முசுலீம்கள் அனைவரும் ஊரைக் காலி செய்திருக்கிறார்கள்.

இந்த வட்டாரம் முழுவதும் கொள்ளையும் தீவைப்பும் நடந்திருக்கிறது. ஆனால் ஒரேயொரு இடத்தைத் தவிர வேறு எங்கும் ஒரு முசுலீம் கூடக் கொல்லப்படவில்லை. பெண்கள் மீது



தனது வீட்டின் மீது எறியப்பட்ட வெடிகுண்டைக் கையில் வைத்திருக்கும் முசுலீம் சிறுமி.

தாக்குதல், கற்பழிப்பு போன்றவையும் கிடையாது. பழங்குடி மக்கள் எந்த இடத்திலும் தங்களை அடிக்கவோ கொல்லவோ இல்லை என்று முகாமிலிருந்த முசுலீம்கள் கூறுகிறார்கள்.

சாராயத்தையும் பணத்தையும் கொடுத்துப் பழங்குடி மக்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றார், ஒரு பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஆசிரியர். விசுவ இந்து பரிசத் தலைவர்கள் போலீசு துணையுடன் பழங்குடியினரை மிரட்டி, கலவரத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்று கூறுகின்றனர் முசுலீம்கள்.

பீப்பாய் பீப்பாயாகப் பெட்ரோலைக் கொண்டு வந்து போலீசு நிலைய வாசலிலேயே வண்டிகளுக்குத் தீ வைத்து விட்டுப் போகிறார்கள் என்றால் இது இந்த நாட்டில் பழங்குடி மக்கள் செய்ய முடிகிற காரியமா? ''அவர்கள் கோயிலைக் கண்டார்களா, மசூதியைக் கண்டார்களா, இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்றுதான் அவர்களுக்குத் தெரியுமா'' என்றார் முகாமிலிருந்த ஒரு முசுலீம் பெண்.

முசுலீம் மக்களுக்கு எதிராக தலித் மக்களையும் பழங்குடியினரையும் ஏவிவிடுவது என்பது இந்தப் படுகொலையில் சங்க பரிவாரத்தினர் வகுத்துள்ள முக்கியமான வியூகம். அவர்களுக்குப் பணம் கொடுத்துத் தூண்டிவிட்டது மட்டுமல்ல, சங்க பரிவாரத்தின் கீழ்மட்ட அமைப்புகளில் அவர்கள் அணிதிரட்டப்பட்டுமிருக்கிறார்கள்.

இந்த நஞ்சை இவ்வளவு ஆழமாக ஊடுருவ விட்டிருக்கிறோம். நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் அனைவரும் இதுபற்றி ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும்.

**குற்றவாளிகளா? ஏமாளிகளா?**

''முசுலீம்களுக்கு எதிரான வன்முறையில் ஒடுக்கப்பட்ட சாதியினரை ஆர்.எஸ்.எஸ். பயன்படுத்திக் கொண்டது'' என்ற கோணத்திலிருந்து மட்டும் இப்பிரச்சனையைப் பரிசீலித்தால் போதும் என்று யாரும் கருதக்கூடாது. இவ்வாறு கருதினால் கொலை கொள்ளையில் ஈடுபட்ட அனைவரையும் அப்பாவிகள் என்றோ ஏமாளிகள் என்றோ கூறி குற்றத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டி வரும்.

முன்பின் தெரியாத ஒரு முசுலீமை 'உணர்ச்சி வசப்பட்டு' கொலை செய்வதும், 500 ரூபாய் காசை வாங்கிக் கொண்டு அடுத்தவன் வீட்டைக் கொள்ளையடிப்பதும் அப்பாவித்தனமோ ஏமாளித்தனமோ அல்ல.

இத்தகைய நபர்கள் தொழில் முறைக் கிரிமினல்களாக இல்லாத பட்சத்தில், இந்தக் குற்றங்களை இழைப்பதில் அவர்களுடைய 'இந்து உணர்வு' ஆற்றிய பங்கு என்ன அவர்களது வர்க்க நலன் அத்தகைய இந்து உணர்வுடன் எவ்வாறு ஒத்துப் போயிருக்கிறது என்பதை நாம் கவலையுடன் பரிசீலிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்துத்துவத்தின் சோதனைச் சாலை: ரத்தம் தோய்ந்த செங்கல்

கொதிக்கின்ற தார்ச்சாலையில் நிர்வாணமாகக் கிடக்கிறாள் அந்தப் பெண் - பிணமாக. அவள் உடம்பிலிருந்து உரித்தெறியப்பட்ட சேலை அருகே சுருண்டு கிடக்கிறது. கிழித்தெறியப்பட்ட அவளது உள்ளாடையின் ஒரு பாதியை தவிப்புடன் இறுகப் பற்றியிருக்கிறது அவளது இடது கை. உடலும் கையும் நசுங்கிச் சிவந்து ரத்தம் உறைந்திருக்கிறது. இடது தொடை முழுவதும் ரத்தம். உடலுக் கருகில் பரிதாபமாகக் கிடக்கிறது அவளது பிளாஸ்டிக் செருப்பு.

அருகே, ரத்தமும், வெறுப்பும் தோய்ந்த ஒரு செங்கல். கொலைகாரர்கள் அவள்மீது எறிந்த இறுதி ஆயுதம். அதுவும் கிடக்கிறது.

அவள் பெயர் கீதா பென். மார்ச் 25-ம் தேதி அகமதாபாத்தில் அவளுடைய வீட்டு வாசலிலேயே இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் வைத்து பட்டப்பகலில் அவள் கொல்லப்பட்டாள்.

அவள் ஒரு இந்துப் பெண். இருந்தும் ஒரு முசுலீம் இளைஞனைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்ளும் மாபாதகத்தைச் செய்துவிட்டாள். ''அவனை ஒப்படைத்து விடு'' என்று வீட்டு வாசலில் நின்று ஆர்.எஸ்.எஸ். காலிகள் மிரட்டிய போது ஒரு பாறையைப் போல அவள் உறுதியாக நின்றாள் - கணவன் தப்பிச் செல்லும் வரை.

முசுலீமைக் காதலித்த குற்றம், அவன் உயிரைக் காப்பாற்றிய குற்றம். இரண்டு குற்றங்களுக்காகவும் அந்தக் கணமே, அங்கேயே அவள் நிர்வாணமாக்கப்பட்டு, நடுத்தெருவில் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டாள். (செய்தி: டைம்ஸ் ஆப் இந்தியா, ஏப்ரல்-19, 2002)



இந்து - முசுலீம் தம்பதியர். திருமணப் பதிவு அலுவலகத்திலிருந்தும் பிற அரசு ஆவணங்களிலிருந்தும் இத்தகைய 'கலப்பு' மணம் புரிந்தோரின் பட்டியலைச் சேகரித்துக் கையில் வைத்துக் கொண்டு, தம்பதியரில் முசுலீமை மட்டும் கொலை செய்திருக்கிறது இந்து மத வெறிக் கும்பல். ஆனால் இது திடீரென்று நடக்கவில்லை.

கடந்த 15 ஆண்டுகளில் இந்து மதவெறி இயக்கங்களின் வளர்ச்சியையொட்டி குஜராத் சமூகத்தின் பண்பாடும் பாசிசமயமாகி வந்திருக்கிறது. மதமறுப்புத் திருமணத்தைக் கேலி செய்வது, இழிவுபடுத்துவது, குடியிருக்க இடம் தராமல் தனிமைப்படுத்துவது ஆகியவை தொடர்ந்து நடந்திருக்கின்றன. இதனை முகாந்திரமாக வைத்தே பல முசுலீம் எதிர்க் கலவரங்கள் நடந்துள்ளன.

இவையனைத்திற்கும் மேலாக மாநில பாரதீய ஜனதா அரசு ஆகஸ்டு'98-இல் காவல் துறைக்கு அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது. ''மதமாற்றத்தை நோக்கமாகக் கொண்டுதான் இந்து - முசுலீம், இந்து - கிறித்தவத் திருமணங்கள் நடக்கின்றன; எனவே இத்தகைய எல்லாத் திருமணங்களையும் புலன் விசாரணை செய்ய வேண்டும்'' என்று கூறி இதற்கென தனியே ஒரு போலீசுப் படையையும் அமைத்தது குஜராத் அரசு.

மதமாற்றம் செய்வோருக்கு மூன்று ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கும் மசோதா ஒன்றை குஜராத் பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. நாடு முழுவதும் எழுந்த கண்டனங்களின் விளைவாகத் தற்காலிகமாக அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் வாழும் கிறித்தவர்களையும் முசுலீம்களையும் மட்டும் கணக்கெடுப்பதற்கென்றே தனியாக ஒரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும் ஜனவரி'2000-இல் குஜராத் அரசு அறிவித்தது. குஜராத் உயர் நீதிமன்றம் இதற்குத் தடை விதித்துள்ளது. இருப்பினும் இந்த முடிவை அரசு வாபஸ் பெறவில்லை.

***கீதா பென்னும் திடீரென்று கொல்லப்படவில்லை.***

**கொதிக்கின்ற தார்ச்சாலையில்
நிர்வாணமாகக் கிடக்கிறாள்
அந்தப் பெண்.**

**கீதா பென்னின்
உயிரைப் பறித்த செங்கல்
ஆயிரக்கணக்கான முசுலீம்களின்
உயிரைக் குடித்த அதே செங்கல்.**

**செங்கல் காவு கொண்ட
கீதா பென்னின் உயிர்
காவுக்குத் தப்பிய
அவள் கணவனின் உயிர்**

**கீதா பென்-கள் பலர்
குஜராத்தில் இருந்திருந்தால்
கீதா பென்
நடுவீதியில் ஆடையின்றி
பிணமாகக் கிடந்திருக்க
மாட்டாள்.**

**குஜராத்தும்
அம்மணமாக நின்று
அவளை வேடிக்கை
பார்த்திருக்காது.**

**தற்போதைய இனப்படுகொலையின்
முக்கியமான இலக்காக இருந்தவர்கள்**

www.padippakam.com

**ஊ**ருக்குள்ளே சாதிவாரியாகத் தெருக்களைப் பிரித்து, தாழ்த்தப்பட்ட மக்களை ஊருக்கு வெளியே சேரிக்குத் தள்ளி, ஊரையும் சேரியையும் மோத விட்டு அக்கிரகாரத்தில் உட்கார்ந்து ரத்தம் குடித்த பார்ப்பனக் கும்பல், இரண்டாயிரம் ஆண்டுகளாக அமல்படுத்தி வெற்றி கண்ட தனது சூழ்ச்சியை இப்போது முசுலீம்களின் மீது ஏவிப் பார்க்கிறது.

முசுலீம்களை எந்த அளவுக்கு அந்நியராக்குகிறோமோ அந்த அளவுக்கு அவர்கள் மீது வெறுப்பைத் தூண்டுவதும், அவர்களைக் கண்காணிப்பதும், தாக்குவதும் எளிது என்பதுதான் இந்த ஆர்.எஸ்.எஸ். சதியின் உள்நோக்கம்.

நாட்டை மதரீதியாகப் பிரித்து பாகிஸ்தான் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் இந்து வெறியர்கள்தான் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள வரலாற்று ஆய்வுகளைப் படிக்கத் தேவையில்லை. கண் முன்னே நடப்பதைப் பார்த்தாலே போதும். வரலாறு புரிந்துவிடும்.

குஜராத்தில் இன்று நாம் காண்கின்ற கொடூரமான இனப்படுகொலையைச் சாத்தியமாக்குவதற்குத் தேவையான அடித்தளத்தைக் கடந்த 15 ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். உருவாக்கியிருக்கிறது.

1989-90 இல் குஜராத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது விசுவ இந்து பரிசத் அகமதாபாத் நகரத்தின் வரைபடம் ஒன்றை வெளியிட்டது. அந்த வரைபடத்தில் காவி வண்ணத்தில் காட்டப்பட்ட பகுதிகள் இந்துக்களுக்கானவையென்றும், அப்பகுதியில் முசுலீம்கள் சொத்து வாங்கவோ குடியிருக்கவோ கூடாது என்றும் எச்சரித்தது.

ஏற்கெனவே தொடர்ச்சியாக நடைபெற்ற கலவரங்களின் காரணமாக உயிருக்கு அஞ்சி ஏழை முசுலீம்கள் பலர் சபர்மதி ஆற்றின் மறுகரைக்குக் குடியேறிவிட்டனர். முசுலீம்களின் இத்தகைய தனிச் சேரிகள் காங்கிரசு ஆட்சிக் காலத்திலேயே தோன்றத் தொடங்கி விட்டன. கல்லுபூர், தரியாபூர், ஜமால்பூர், சர்கேஜ், ஜோகாபுரா ஆகியவை கடந்த பத்தாண்டுகளில் உருவான தனிச்சேரிகள்.

ஆனால் மேல் தட்டு நடுத்தரவர்க்கம், அதிகாரிகள் மற்றும் வசதி படைத்த வர்க்கங்களைச் சேர்ந்த முசுலீம்கள் 'காவி'ப் பகுதியில் கலந்து வாழ்ந்து வந்தனர்.

அகமதாபாத்தில் பணக்காரர்கள், அதிகாரிகள் வசிக்கும் பகுதியான நவரங்புராவில் குடியிருந்த இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் பொது மேலாளர் கான் என்பவர் 1989 ஜூலையில் நடைபெற்ற கலவரத்தின் போது கட்டிடத்தின் உச்சியிலிருந்து தூக்கியெறிந்து கொல்லப்பட்டார்.




# இந்துத்துவத்தின் சோதனைச் சாலை:

## ஆர்.எஸ்.எஸ் உருவாக்கும் பாகிஸ்தான்கள்!

அதிர்ச்சியூட்டத்தக்க சம்பவமாக இது கருதப்பட்ட காலம்போய் மெல்ல மெல்ல காவிப் பகுதியில் முசுலீம்களுக்கு வீடு விற்கவோ வாடகைக்கு விடவோ கூடாது என்பது அகமதாபாத்தில் எழுதப்படாத விதியாகி விட்டது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு (பிப்-5, 2000) பாரதீய ஜனதாவின் கவுன்சிலர் தலைமையில் 40 பேர் அடங்கிய கும்பல் ஒன்று "துளசி அபார்ட்மெண்ட்" என்ற பல மாடிக் கட்டிடத்தில் நுழைந்து அதன் லிஃப்டுக்குக் குண்டு வைத்துத் தகர்த்தது. அந்தக் கட்டிடத்தில் குடியிருந்த இரண்டு முசுலீம் வீடுகளைச் சூறையாடியது.

"ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. இது இந்துக்கள் பகுதி; இரண்டு முசுலீம் குடும்பங்கள் இங்கே குடி வந்ததனால் உள்ளூர்க்காரர்களுக்கு கோபம் வந்துவிட்டது அவ்வளவுதான்" என்று இச்சம்பவம் பற்றிப் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தார் போலீசு டெபுடி கமிசனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பால்டி என்ற பகுதியில்தான் தற்போதைய கலவரத்தில் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. முன்னாள் காங்கிரசு எம்.பி. ஜாப்ரி குடும்பத்துடன் எரித்துக் கொல்லப்பட்டதும் பணக்காரர்கள் வாழும் காவிப் பகுதியில்தான்.

இதே காவிப்பகுதியில் எஞ்சியிருந்த ஒரேயொரு பெரிய முசுலீம் மக்களின் குடியிருப்பு நரோடா பாட்டியா. 400 முசுலீம்கள் கொத்தாகத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதும், கும்பல் கற்பழிப்புகளும் இங்குதான் அதிகம். இக்குடியிருப்பின் 25,000 மக்களும் இன்று அகதிகள்.

முசுலீம்கள் வேண்டுமென்றே தனியாக வாழ்வதாகவும், மைய நீரோட்டத்துடன் கலக்க மறுப்பதாகவும், பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவும் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும்தான் அவர்கள் இப்படி ஒதுங்குவதாகவும் பிரச்சாரம் செய்கிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

ஆனால் ஏழை 'இந்துக்கள்' மட்டுமல்ல, பணக்கார இந்துக்களும் கூட முசுலீம் மக்களுடன் அருகருகே வாழ்ந்து சமூக உறவையும் நட்பையும் ஏற்படுத்திக் கொண்டு விடக்கூடாது என்பதற்காகவே ஒவ்வொரு நகரத்திலும் ஒரு 'பாகிஸ்தானை' திட்டமிட்டே ஆர்.எஸ்.எஸ். உருவாக்குகிறது.

சமீபத்தில் பம்பாயில் தாதர் எனும் மேட்டுக்குடிப் பகுதியில் ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பில் வீடு வாங்க முனைந்த ஒரு இந்து - முசுலீம் தம்பதியர் (கணவன் - இந்து, மனைவி - முசுலீம்) சந்தித்த அனுபவம் மிகவும் கொடூரமானது. "இந்தக் குடியிருப்பில் உள்ளவர்கள் எல்லோரும் 'கவுரவமான' இந்து குடும்பத்தினர். எனவே நீங்கள் இந்தக் கட்டிடத்தில் வீடு (ஃபிளாட்) வாங்குவதில் அவர்களுக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்று எல்லோரிடமும் ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு வந்துவிடுங்கள்" என்று நிபந்தனை விதித்தார்களாம் ரியல் எஸ்டேட் நிறுவனத்தினர்.

"பெரும்பான்மைச் சமூகத்தின் நல்லெண்ணத்தைப் பெற்றால்தான் சிறுபான்மையினர் அமைதியாக வாழ முடியும்" என்று ஆர்.எஸ்.எஸ். தீர்மானம் போடுவதற்கு முன்னரே அது இப்படி அமலாகிக் கொண்டிருக்கிறது. ●



படிப்பகம்



# விசேடக் கூட்டு

## துரை. சண்முகம்

"என்ன எஸ்.கே. சார், ரொம்ப பிஸியா? எதுத்தாப் புல ஆள் நிக்கிறதுகூட தெரியாம வேல பாத்துகிட்டு இருக்கீங்க!"

"ஓ, சாரி! வாங்க தனபால். டைரக்டர் கொஞ்சம் ஸ்டிரிக்டா இன்ஸ்ட்ரக்சன் கொடுத்துருக்கார்ல... அதான் பெண்டிங் பைலல்லாம் வேகமா பாத்துகிட்டு இருக்கேன். சொல்லுங்க ஏதாவது விசேசம் உண்டா?"

"விசேசந்தான் சார். பொண்ணுக்கு கல்யாணம் வச்சிருக்கேன். இன்னும் சூப்பிரண்ட்டக் கூடப் பாக்கல. மொதல்ல உங்களுக்கு, நம்ப பி.கே., பன்னீர் சார்க்கெல்லாம் பத்திரிகை வச்சிடுவோம்னுதான் வந்தேன்... இந்தாங்க. காஞ்சிபுரத்திலதான் வச்சிருக்கேன். அப்புறம் நம்ம ஆபீஸ் ஸ்டாப்லாம் வர்ற மாதிரி சண்டேல தான் மேரேஜ். அவசியம் வரணும் சார்."

"கங்கிராஜிலேசன் சார், நாங்க இல்லாமலா?" எழுதிக் கொண்டிருந்த பைலை மேஜையில் கிடத்திவிட்டு, மரியாதையாக எழுந்து பத்திரிகையை வாங்கினார், எஸ்.கே. பக்கத்து சீட்டிலிருந்த பி.கே.யும், பன்னீரும்கூட புன்னகை ததும்ப பத்திரிகையை வாங்கிப் பிரித்துப் பார்க்கும் ஆர்வத்தில் இறங்கினர்.

"அட! எஸ்.கே... பாத்தீங்களா! சார் பையனை சரியான எடத்துல புடிச்சிருக்காருப்பா! ஸ்டேசன் மாஸ்ட்ராய், சென்ட்ரல் கவர்மெண்டையே புடிச்சிட்டாரு... சார் பெரிய ஆளுப்பா!'பின்னே சர்வீஸ் முடியறதுக்குள்ளேயே உஷாரா விசேசத்த முடிச்சுட்டார்ல" பி.கே. கிண்டல் வார்த்தையில் பன்னீரும் சேர்ந்து கொண்டார்.

"நம்ம கம்யூனிட்டில நல்ல வரன் வர்றது கஷ்டம் சார். அதான் பொருத்தமா இருந்ததனால கொஞ்சம் பவுன் கூட போனாலும் பரவாயில்லேன்னு முடிச்சுட்டேன். படிச்சு அவளும் வேலைக்குப் போறா, பையனும் ஒரு லெவல்ல இருந்தாதானே சரியா இருக்கும்? இனிமே நம்மள மாதிரி ஒத்த சம்பளம் வாங்கி ஓட்ட முடியாது சார்." தனபால் விவரிக்கும் போதே எஸ்.கே.யின் முகம் ஆராய்ச்சித் தோரணையில் மாறிக் கொண்டிருந்தது.

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க தனபால். இப்பெல்லாம் உங்காளுங்களுக்கு உள்ள அவன்யூஸ், மத்த கேஸ்டுக்கு கெடையாது தெரியுங்களா? சும்மா சாதி பெருமை பேசி வீணாப் போறாங்க சார், பாருங்க சிக்ஸ்டியில உள்ளார வந்தீங்க... இப்ப வீ.ஆர்.எஸ். வாங்குறதுக்குள்ள பேமிலிய செட்டில் பண்ணிட்டீங்க. இதுல என்ன சாதி வித்தியாசம்." பொல பொலவென்று வார்த்தை உதிர்த்தார் எஸ்.கே. இதை எதுக்குச் சொன்னார் என்று ஒரு கணம் யோசித்த

> *என் சர்வீஸ்ல இது வரைக்கும் எஸ்.சி. மேரேஜ்க்கெல்லாம் போனதில்ல, என்னமோ இன்னமும் மனசுக்கு ஒத்து வரமாட்டேங்குது. பாத்துட்டு வர்லாம்னா கூட பரவாயில்ல, சாப்பிட்டு பழக்கமில்லை சார். அதான் யோசனையா இருக்கு."*

தனபால் குழப்பமாயிருக்க, வந்த வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

"இன்னும் அக்கவுண்ட் செக்சென்லையெல்லாம் பத்திரிகை தரவேண்டியிருக்கு, நீங்க மூணு பேரும் அவசியம் வரணும் சார், சாப்பாடெல்லாம் பக்காவா காஞ்சிபுரம் சரவணபவன்ல ஆர்டர் பண்ணியிருக்கேன். நம்ம ஸ்டாப்பெல்லாம் மார்னிங்கே வந்துடுங்க... வரட்டுங்களா சார்..." தனபால் புன்னகைத்து விடை பெற்றார்.

"அட! நீங்க என்ன சார், நம்ம வீட்டு கல்யாணம்... வந்து கலக்கிட மாட்டோம். சண்டே வேறே, எல்லா பயல்களையும் தள்ளிகிட்டு வந்துட்றேன். டோண்ட் ஒர்ரி" சிரிப்பில் குலுங்கினார் எஸ்.கே.

"பாத்து சார்! பக்தவச்சலம் பீரியட்ல போட்ட நாற்காலி நீங்க பூரிக்கிற பூரிப்புல புட்டுக்கப் போவுது" பன்னீர் வினையமாக ஆரம்பித்தார்.

"என்ன பன்னீர் விடுகதை போடுறீங்க?"

"பின்ன என்ன சார். கல்யாணத்துக்கு போறதாவே முடிவு பண்ணிட்டீங்களா? எல்லா பயல்களையும் அழைச்சிகிட்டு வர்றேன்னு வேற வாக்குறுதி தந்துட்டீங்க. என் சர்வீஸ்ல இதுவரைக்கும் எஸ்.சி. மேரேஜ்க்கெல்லாம் போனதில்ல, என்னமோ இன்னமும் மனசுக்கு ஒத்து வரமாட்டேங்குது. பாத்துட்டு வர்லாம்னா கூட பரவாயில்ல, சாப்பிட்டு பழக்கமில்லை சார். அதான் யோசனையா இருக்கு." இதுவரை வெளி இடத்தில் போய் சோறே திங்காத பிறவி போல இருந்தது அவரது அங்கலாய்ப்பு.

"என்ன பி.கே., பன்னீர் நமக்கு மேலே நாசுக்கு பாக்குறாரு, நம்ம செக்ஷன்ல வேலை பாக்குறவரு சீட்டு தேடி வந்து பத்திரிகை தர்றப்ப மூஞ்சியில அடிச்ச மாதிரியா பதில் சொல்லுவாங்க. வழக்கம்போல தலைய காட்டிட்டு நம்ம பார்முலாவ பாலோ பண்ண வேண்டியதுதான்."

"என்ன சார் அது புது பார்முலா எனக்கும் சொல்லுங்க" பன்னீர் பரபரத்தார்.

www.padippakam.com

''எல்லாத்தையும் கேட்டுக் கேட்டு செய்யுறதனாலதாய்யா இன்னும் நீ கிளார்க்காவே இருக்க, பேசாம சண்டே எங்ககூட மேரேஜ் வா. அப்புறம் நீ எல்லா மேரேஜ்ஜயும் அட்டன் பண்ணிடுவ.'' எஸ்.கே.வும் பி.கே.வும் கலகலப்பாகச் சிரிக்க பார்முலா புரியாமல் பன்னீர் விழித்தார்.

***

''என்னங்க! திடீர் திடீர்னு எங்க போயிடுறீங்க நீங்க. முகூர்த்தம் முடிஞ்சு பொண்ணு மாப்பிள்ளை பாலி வுட போறப்பவும் ஆளக் காணோம். மத்தியான சாப்பாடும் ஆரம்பிச்சிடுச்சி. இன்னும் யார எதிர்பார்த்து வாசபக்கம், வாசபக்கம் வந்து நிக்கிறீங்க. உள்ளார உள்ள சனங்கள விசாரிச்சு சாப்பிடக் கூப்பிடக் காணோம். இங்க வந்து சும்மா பித்து பிடிச்ச மாதிரி நிக்கிறீங்க. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க தப்பா எடுத்துக்கப் போறாங்க.''

''ஆபீஸ் ஸ்டாப்புக்கெல்லாம் பத்திரிகை வச்சிருக்கேன். இன்னும் ஒருத்தரக் கூட காணோம். ஒருவேளை மண்டபம் தெரியாம தடுமார்றாங்களோ என்னவோ, அதான் எதிர்பாத்துகிட்டு நிக்கிறேன்.''

''நீங்க வேறே ஆபீசுல வேலை செய்யிறவங்களுக்கு வழி தெரியாதா? உங்க பேச்சைக் கேட்டு மொத பந்தில சாப்பிடற சனங்களையும் சாப்பிடவுடாம, ரெண்டு டேபிள் காலியாவே வச்சாங்க. எட்ட வர்றவங்க உங்க ஆளுங்க. ஞாயிற்றுக்கிழமையும் அதுவும் என்னத்த அலையிறதுன்னு விட்டுருப்பாங்க. நீங்க வாங்க உள்ள சனங்க வேற இன்னும் நிறைய பேரு சாப்பிடல பாத்து கூப்பிடுங்க வாங்க.'' அவசரமாக கல்யாண மண்டபத்துக்குள் ஓடினார் தனபால் மனைவி.

மண்டபத்துக்கு வெளியிலேயே தீவிரமாக வெறித்துக் கொண்டிருந்தார் தனபால். ஒன்பதரையிலிருந்து பத்தரை முகூர்த்தம் வச்சதேவந்து போகும் வசதிக்காகத்தான். இருந்தும் யாரும் வராதது தனபாலுக்கு வருத்தம் மேலிட வார்த்தைகள் தொண்டைக்குள்ளேயே புலம்பித் தவித்தன.

''என்ன தனபால்! கரெக்டா வந்துட்டோம், பாத்தீங்களா?'' எஸ்.கே. குரல் கணீரென்று ஒலிக்க, பி.கே.வும் பன்னீரும் புடைசூழ்ந்து உள்ளே நுழைய மணி பனிரெண்டைத் தொட்டுக் கொண்டிருந்தது. தனபால் இன்ப அதிர்ச்சிக்கு ஆளானவர் போல, ''வாங்க சார், வாங்க சார்...''

''ஏய் முருகா! அந்த டேபிள கிளீன் பண்ணு.''

''ஏய் ராசு! இவங்கள அழைச்சிகிட்டு போவனும் வா வா.'' தனபால் ஆர்வ மிகுதியால் எல்லோர் கவனத்தையும் ஆபீஸ் ஊழியர்கள் பக்கம் திருப்பினார். அவர்களுக்கு முதலில் உணவு பரிமாற ஆர்வமாய் இருந்தார் தனபால்.

சற்றும் எதிர்பாராத எஸ்.கே. ஓடி வந்தவரிடம் நீங்க போங்க, நீங்க போங்க என ஜாடை காட்டிவிட்டு ''அட! கொஞ்சம் இருங்க தனபால். இது நம்ம வீட்டு கல்யாணம். மொதல்ல வந்தவங்கள கவனிங்க. நமக்கென்ன, விருந்தாளியா? வேத்தாளியா? கடைசில பாக்கலாம், மொதல்ல வந்தவங்கள கவனிங்க.''

''இல்ல சார்! எல்லாம் சாப்பிட்டாச்சு. நம்ம ஸ்டாபுக்காகத்தான் ரெண்டு டேபிள் ஒதுக்கி வெச்சிருக்கேன். லேட்டானா நல்லா இருக்காது வாங்க சார்.'' திரும்பத் திரும்ப வலியுறுத்தினார் தனபால்.

''இருங்க தனபால், இருங்க... என்னங்க யாரு வீட்டு கல்யாணம்? நம்ம வீட்டு கல்யாணங்க. ஆபீஸ் ஸ்டாபெல்லாம் ஒரே பேமிலி மாதிரி. மொதல்ல வந்தவங்கள கவனிப்பீங்களா அத விட்டுட்டு... என்ன அவசரம், பஸ்ல வந்தது வேறே ஒரு மாதிரியா கேரியா இருக்குது. கொஞ்சம் லேட் ஆகட்டும்'' பி.கே. விலாவாரியாக தனபாலிடம் காரணம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஏய் சாருக்கு ஒரு சோடா ஒடைச்சிகிட்டு வா..!'' தனபால் ஒருவரை கூப்பிட்டு சோடா கேட்டு விரைவுபடுத்த ''அட நீங்க சும்மா இருங்க. நாங்க பாத்துக்கிறோம்'' என்று மயக்கம் தெளிந்தவர்போல் உதறினார் பி.கே.

''என்ன சார் எதையுமே செய்யவுட மாட்டேங்கு நீங்க... இவ்ளோ தூரம் வந்துட்டீங்க...'' தனபால் அலுத்துக் கொண்டார்.

''டோன்ட் ஒர்ரி...! ஏன் வருத்தப்படுறீங்க...! தனபாலுக்கு பெரிய செலவா வச்சுட்டா போச்சு'' என்று பி.கே. எஸ்.கே.யிடம்

**''இப்ப எங்க சாப்புட்டா எ**
**போதாதா, இதப் போயி ெ**
**உங்க விசேசத்துக்கு**
**நாங்க செய்யக்கூடா**

கேட்க, சிரிப்பில் பன்னீரும் சேர்ந்து கொண்டார்.

''சார் மொய் எங்க.'' பன்னீர் தனபாலிடம் கேட்க ''அட! அத வுடுங்க மொதல்ல சாப்பிடுங்க.'' திரும்பவும் தனபால் பிடிவாதம் காட்ட. ''சாருக்கு விசேசத்தப்பவும் சின்சியாரிட்டைய பாரு. மொதல்ல மொய் எந்த பக்கம்னு சொல்லுங்க. நம்ம ஸ்டாப் வீட்டு கல்யாணம் மொத மொய் நம்ம மொய்யாவுல விழணும்.'' மீண்டும் உரிமை எடுத்துக் கொண்டதுபோல முறுக்கிக் கொண்டு போய் மொய் எழுதிக்




படிப்பகம்

www.padippakam.com

**? உங்க உபசரிப்பு ஒண்ணு**
**பீல் பண்ணாதீங்க தனபால்.**
**செலவா இருக்கட்டுமே?**
**ன்ன நான் சொல்றது?"**

கொண்டிருந்தனர்.

பின்னாலேயே வந்த தனபாலைக் கவனித்த எஸ்.கே. அவரது கையை ரகசியமாகப் பிடிப்பது போல பற்றி தனியாக ஒரு ஓரத்திற்கு அழைத்துப் போனார்.

''தனபால் சார், இன்னைக்கு காஞ்சிபுரத்துலேயே மூணு முகூர்த்தம். மொதல்ல உங்களத அட்டன் பண்ணனும்னுதான் நேரே வந்துட்டோம். நம்ம சி.டி.ஓ. ஆபீஸ் கிருஷ்ணன் இல்ல அவரு வீட்டு முகூர்த்தமும் இன்னக்கிதான். போய் ஒரு அரைமணி நேரத்துல கண்டுகிட்டு அப்படியே ரிட்டன் வந்துட்றோம்!'' கண்ணை சொடுக்கினார் எஸ்.கே.



''என்ன சார்! இப்பதான் வந்தீங்க சாப்பிடாமகூட கௌம்புனா...'' தனபால் வருத்தத்தை நீட்டினார்.

''அட! என்ன தனபால் புரிஞ்சிக்காம, சாப்பிடாமயா போகப் போறோம். அதுவும் சரவணபவன் மீல்ஸ்ங்குறீங்க, விடுவோமா, ஏதேது லேட்டா வந்தா இல்லேன்னு சொல்லிடுவீங்க போல'' இருக்கே, பி.கே. பிளேட்டைத் திருப்பிப் போட, தனபால் அதிர்ந்து போனார்.

''அதுக்கில்லை சார்! சாப்பிட்டுட்டுப் போனீங்கன்னா திருப்தியா இருக்கும்''

''என்ன சார்! சாப்பாடு சாப்பாடுன்னுகிட்டு, வந்ததுலேர்ந்து நீங்க காட்டுற அன்பை பார்த்தே வயிறும் மனசும் நெறஞ்சிடுச்சிடுச்சுங்க. ஒரு அரை மணி நேரந்தான் உடனே பார்த்துட்டு ரிட்டன் வந்துட்றோம். தோ வந்துட்றோம்'' பி.கே. பரபரக்க.

''சாப்பிடாம போறீங்க, ஒங்களுக்காக வெயிட் பண்ணுவேன் சார், வந்துடுங்க'' தனபால் நம்பிக் கையாய் விடையளித்தார்.

***

''என்னங்க?... என்னங்க?... பதறிக் கொண்டு வந்தார். தனபாலின் மனைவி. உறவினரிடம் பேசிக் கொண்டிருந்த தனபால் அவசரமாக திரும்பினார். ''ஏன் இப்படி சத்தம் போட்டுகிட்டு வர்ற என்னாச்சு?''

''சாப்பாடு தீர்ந்து போச்சுங்க. இன்னும் அம்பது அறுவது சனம் இருக்கும் சோறில்ல.''

''அவ்வளவுதான நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன். போய் ஆர்டர் கொடுத்தா சாப்பாடு வந்துடப் போகுது. நம்ம ஸ்டாபுங்க வேற ஒரு மூணு பேருக்கு சேர்த்து சொல்லணும். நான் நேர்ல போய் ஆர்டர் பண்ணிட்டு வர்றேன்.''

''தோ வந்துட்றேன்'' என்று டூ வீலரில் சரவண பவன் கிளம்பினார், தனபால்.

***

வேகமாக ஹோட்டலுக்குள் நுழைந்து கேஷ் கவுண்டரிலிருந்தவரிடம் ''சார் இன்னும் ஒரு எழுவது சாப்பாடு வேணும். காலைல அனுப்புனீங்க பாருங்க அந்த மண்டபதுக்கே அனுப்பிடுங்க.'' பில்லைக் கட்டிக் கொண்டே சத்தமாக விவரித்துக் கொண்டிருந்தார், தனபால். பணத்தை செலுத்திவிட்டு பக்கத்து மேசை பக்கம் திரும்பிய போது ஒரு கணம் திடுக்கிட்டார்.

''என்ன தனபால் வாங்... வாங்'' வாயில் சோற்றை வைத்துக் கொண்டு விழுங்க முடியாமல் சிரித்தார், எஸ்.கே. பன்னீரும் முகத்தை மலர்த்திக் காட்ட கோரைப்பற்கள் போல சோற்றுப் பருக்கைகள் விகாரமான உணர்ச்சிக்கு ஆட்பட்டிருந்தது.

''என்ன சார் இப்படிப் பண்ணிட்டீங்க...'' தனபால் அழாத குறையாகப் பதட்டமடைந்தார்.

''நோ... நோ... நோ... தனபால், கிருஷ்ணன் பங்ஷன் அட்டன் பண்ணமா அங்கயே லேட் ஆயிடுச்சி, ரெண்டாவது பாருங்க சாப்பாடே ஷார்ட்டேஜ் ஆயிடுச்சு, இதுல நாங்க வேறே ஏன் சிரமம் கொடுத்துட்டுன்னுதான், இப்ப எங்க சாப்புட்டு என்ன உங்க உபசரிப்பு ஒண்ணு போதாதா, இதப் போயி பெரிசா பீல் பண்ணாதீங்க தனபால். உங்க விசேசத்துக்கு எங்க செலவா இருக்கட்டுமே? நாங்க செய்யக் கூடாதா? என்ன பி.கே. சார். என்ன நான் சொல்றது?''

''ஆமாம் சார் இப்ப இங்க வந்து சண்டேல காஞ்சிபுரத்துல வந்து சாப்பிடறோமுன்னா இது யார் வீட்டுச் சாப்பாடு? இதுவும் தனபால் சார் வீட்டுச் சாப்பாடுதான்! ஹா... ஹா!! உம் ஆகட்டும் சார், போய் விசேசத்த கவனிங்க ஊம்..'' தனபாலுக்கு விடையளித்துக் கொண்டே அவர்கள் சாப்பாட்டின் குதூகலிப்புக்கு சூழ்நிலையை மாற்றினர்.

''என்ன தனபால் பாத்தீங்களா, ஒரு சாப்பாடு உள்ளார போக என்ன மாதிரி, எத்தனக் கூட்டு வைக்குறான் பாரு.. சரவண பவன், சரவண பவன்தான். சரியாதான் செலக்ட் பண்ணிருக்கீங்க.''

''இன்னைக்கு விசேச தேதி சார். விசேச கூட்டா இருக்கும்'' பன்னீர் வழி மறித்தார்.

விசேசக் கூட்டை வெறித்தபடி மேற்கொண்டு பேச வழியின்றி, உள்காயம் பட்டது போல் ஹோட்டல விட்டு வெளியே வந்தார் தனபால்.


படிப்பகம்

www.padippakam.com



இசுரேலின் முற்றுகைக்கும் கொடூரமான தாக்குதலுக்கும் ஆளாகியிருக்கிறது பாலஸ்தீனம். இசுரேலிய ஆக்கிரமிப்பைக் கண்டிக்குமுகமாக மார்ச் 26-ம் தேதி உலக எழுத்தாளர்கள் பலர் பாலஸ்தீனத்திற்கு வருகை தந்தனர். குண்டு வீச்சுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் மத்தியில் பாலஸ்தீனக் கவிஞர் முகமது தார்வேஷ் ஆற்றிய வரவேற்புரையின் சில பகுதிகள்:

● ○ ●

# நம்பிக்கையின் சுமை

சமாதானத்தின் மண்
என்ற தனது பழங்காலப்
பெயரை
எண்ணி எண்ணி
ஏங்கிக் கொண்டிருக்கும்
எங்கள் மண்ணில்

குருதி தோய்ந்த
இந்த வசந்த காலத்தில்
உங்களை வரவேற்கிறேன்...

உங்கள் வீரம் செறிந்த வருகை
இந்த முற்றுகையைப் பிளக்கும்
ஒரு போர் வடிவம்.

நாங்கள்
கேட்பாரற்ற அனாதைகள்
என்று
மருகிக் கொண்டிருந்தோம்.
இல்லை

இதோ
நீங்கள் வந்துவிட்டீர்கள்...

●

மனித குலத்தின்
தலைவிதியை நிர்ணயிக்கும்
கடமையை
இலக்கியம் மட்டுமே
வெளிப்படுத்திவிட முடியுமா?

நெருக்கடியான காலங்களில்
மனிதப் பேரழிவுகளில்
எழுத்தாளனின் பாத்திரம்
என்ன?

எழுத்தைத் தவிர்த்த வேறு
வடிவங்களில்
தனது தார்மீகப் பாத்திரத்தை
எழுத்தாளன் தேடுகிறான்.

அந்தப் பாத்திரம்
அவனது இலக்கிய நேர்மையை
உறுதி செய்ய வேண்டும்.
உயர்ந்த விழுமியங்களுக்கு
மக்களை ஒன்று திரட்ட
வேண்டும்.

அவற்றில் தலையாயது
சுதந்திரம்.

●

எழுத்தாளர்கள்
சொல்லின் வித்தகர்கள்
இருப்பினும்
இரத்தம் பெருகும் மண்ணில்
சொற்பெருக்கு எதற்கு
அணியலங்காரங்கள் எதற்கு?

எம் சொற்கள் எளிமையானவை
எம் உரிமைகளைப் போல.

நாங்கள்
இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள்
இந்த மண்ணில் பிறந்தவர்கள்.

நாங்கள்
வேறொரு தாயை அறியோம்.
தாய் மொழியையும் அறியோம்.

இது எங்கள் நாடு
இந்தச் சிறிய பகுதி
எங்கள் தாயகத்தின் ஒரு பகுதி.


படிப்பகம்

www.padippakam.com

புராணக் கற்பனையில் பிறந்த
தாயகமல்ல
உண்மையான தாயகம்.

இந்த ஆக்கிரமிப்பு
ஓர் அந்நிய ஆக்கிரமிப்பு
எண்ணிலடங்காத
இறைவனின் ஆணைகளைத்
துணைக்கழைத்தாலும்
இது ஓர் ஆக்கிரமிப்புதான்.

மேலும்
இறைவன்
யாருக்கும் தனிச்சொத்தல்ல.

ஆக்கிரமிப்பை எதிர்ப்பது - ஒரு
உரிமை மட்டுமல்ல
அது தேசியக் கடமை.

மனிதனை
அடிமைத்தனத்திலிருந்து
சுதந்திரத்திற்கு உயர்த்தும்
மனிதகுலக் கடமை.

பேரழிவுகளைத் தடுக்க
ஒரு வழிதான் உண்டு.
ஆக்கிரமிப்பிலிருந்து
பாலஸ்தீனத்தை
விடுதலை செய்ய வேண்டும்.

இன்னொரு மக்களை
அடிமைப்படுத்த முடியும் என்ற
மாயையிலிருந்து
இசுரேலியச் சமூகத்தை
விடுதலை செய்ய வேண்டும்.

●

இந்த ஆக்கிரமிப்பு
எமக்கு
எதையும் வழங்கவில்லை.

நிறவெறி அமைப்பையும்,
ஆன்மாவைத்
தோற்கடிக்க முயலும்
வாளின் வலிமையையும் தவிர
வேறெதையும் வழங்கவில்லை.

ஆனால் எங்களுக்கோ
ஒரு தீராத நோய் -
அதன் பெயர் நம்பிக்கை.

விடுதலையின் மீதும்
சுதந்திரத்தின் மீதும்
நம்பிக்கை.

மாவீரர்களோ பலிகடாக்களோ
தேவைப்படாத
ஒரு வாழ்க்கையின் மீதான
நம்பிக்கை.

எங்கள் குழந்தைகள்
பாதுகாப்பாகப்
பள்ளிக்குச் செல்வார்கள்
என்ற நம்பிக்கை.

எங்கள் கவிஞர்கள்
செந்நிறத்தின் அழகை
ரத்தத்தில் தேடாமல்
ரோஜாவில் காண்பார்கள்
என்ற நம்பிக்கை.


இந்த மண்
பாலஸ்தீனம் என்ற
தன் சொந்தப் பெயரை
சமாதானத்தின் மண் என்ற
சொந்தப் பெயரை
மீண்டும் சூடும்
என்ற நம்பிக்கை.

இந்த நம்பிக்கையின் சுமையை
எங்களுடன் சேர்ந்து
சுமக்க வந்திருக்கும்
உங்களனைவர்க்கும் நன்றி.

●



www.padippakam.com



வங்காள நாடகம்:

# நீலக்கண்ணாடி

● தீனபந்து மித்ரா

"நீலக் கண்ணாடி" (நீல்தர்பன்) என்ற வங்காள நாடகத்தின் மூன்று காட்சிகளை இங்கு தருகின்றோம். முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டம் எழுந்த கொந்தளிப்பான 1850-ஆம் ஆண்டுகளின் எழுச்சி உணர்வால் உந்தப்பட்டு **தீனபந்து மித்ரா** என்பவரால் இந்நாடகம் எழுதப்பட்டது. அன்றைய பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக இந்திய விவசாயிகள் சார்பாக அவர் பேனாவால் கலகம் செய்ய விழைந்தார்; அதில் பிறந்ததே இந்நாடகம்.

அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த, *ஜேம்ஸ்லாங்* என்ற ஆங்கிலேயப் பாதிரியார்தான் இவ்வங்காளி நாடகத்தை ஆங்கிலத்தில் பதிப்பிக்க ஏற்பாடு செய்தவர். இவர் அவுரி விவசாயிகளை ஆதரித்த குற்றத்திற்காகச் சிறைத் தண்டனையும், ரூ.1000 அபராதமுமாகத் தண்டனை பெற்றார். உலகம் முழுவதும் *ஜேம்ஸ் லாங்*கிற்காக உரிமைக் குரல்கள் எழுப்பப்பட்டன.

நாடகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் புரட்சிக் கவி *மைக்கேல் மதுசூதனன்தத்*. தன் பெயரை முன்நிறுத்தாமல் "மொழியாக்கம்: மண்ணின் மைந்தன்" என்றே அவர் குறிப்பிட்டார்.

"நீலக் கண்ணாடி" - ஆங்கிலேய அவுரிப் பயிர் முதலாளிகளின் கொள்ளையை உலகின்முன் பிரதிபலித்த கண்ணாடி. வங்கத்தின் 200 ஆண்டுகால ஆங்கிலேய ஏகாதிபத்திய எதிர்ப்பிலக்கியங்களில் - ஏராளமான நாட்டுப்புறப் பாடல்கள், சொலவடைகள், கதைகள், பழமொழிகள் இதில் உள்ளடங்கும் - "நீலக்கண்ணாடி"யும் ஒன்று.

***

1858-இல் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முடிந்து 'மாபெரும்' இங்கிலாந்து ராணியின் சாம்ராச்சியக் கொடுங்கோல் இந்தியாமீது ஊன்றப்பட்டது. இந்த மாற்றங்களைப் பற்றியும், இந்திய விவசாயிகள் மீது பிரிட்டிஷ் ஆட்சி இழைத்த சித்திரவதைகள், அவமானங்கள், அவர்களை அம்மணமாக்கிக் கொன்ற கொடூரங்கள் ஆகியவற்றை மார்க்ஸ் ஆவணமாக்கினார். அக்காலகட்டத்தில் வங்கத்தின் விவசாயிகள் போராடினார்கள். இதில் ஒன்றுதான் - நீலச்சாயம் தயாரிக்கும் செடியான அவுரிப் பயிருக்கு எதிரான கலகமும், போரும்.

நெற்பயிர் விளைந்த வயல்களை அழித்து அங்கே அவுரிப்பயிர் விளைவிக்கச் சொல்லி பிரிட்டிஷ் அரசு விவசாயிகளைக் கெடுபிடி செய்தது; உள்ளூர் கருங்காலிகளை வைத்து விவசாயிகளுக்கு நிர்ப்பந்தம் கொடுத்தும், அவர்களைச் சித்திரவதை செய்து பலவந்தமாக முன்பணம் பெறச் செய்தும், குடும்ப உறுப்பினர்களை அடித்தும், கொலை செய்தும், பெண்களைத் தூக்கிச் சென்று கற்பழித்தும், குழந்தைகளைத் துண்டுத் துண்டாக வெட்டியும் - ஏராளமான கொடுமை செய்து அவுரிப் பயிரை வைக்கச் சொன்னார்கள். தனது சாயத் தொழில்துறையை விஸ்தரிக்கும் கனவில் வெறிகொண்டு வேலை செய்தார்கள்.

வெள்ளை அவுரி முதலாளிகள் - கருங்காலிகள் - ஆங்கிலேய அதிகாரிகள் இந்த முக்கூட்டின் தில்லுமுல்லுகளால் விவசாயிகள் ஏமாற்றப்பட்டு ஏராளமான நிலங்களைப் பறி கொடுத்தார்கள்.

இன்று உலகமயமாதலின் சுருக்குக் கயிற்றில் பிணைக்கப்பட்டுவிட்ட இந்தியாவில் அன்றைய அவுரியைப் போன்ற பல பயிர்கள் நம் விவசாயிகள் மீது திணிக்கப்படுகின்றன.

பெப்சி 'சிப்ஸ்' தயாரிக்க பஞ்சாபில் உருளைக்கிழங்கு பயிரிடச் சொல்கிறது; தருமபுரி மாவட்டத்தில் என்ன ஏது எதற்கு என்றே தெரியாமல் மெடிசின் காய் பயிரிட ஆசைகாட்டப்படுகிறார்கள் விவசாயிகள்; பூப்பண்ணை வைக்கவும், மரிக்கொழுந்து பயிரிடவும் சொல்லி நம் விவசாயிகளை பன்னாட்டுக் கம்பெனிகள் தூண்டுகின்றன. அறியாமல் மாட்டிக் கொள்ளும் விவசாயிகளை - கந்து வட்டிக்காரர்களும், கமிசன் மண்டிக்காரர்களும் நிலத்தைப் பிடுங்கி நடுத் தெருவுக்குத் தள்ளுகிறார்கள். அன்று பிரிட்டிஷார் - இன்று பன்னாட்டுக் கம்பெனிகள்.

***

நாடகக் கதையைச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம். கோலக் சுந்தர்பாசு ஒரு நடுத்தர விவசாயி. பரோபகாரமும் இளகிய நெஞ்சமும் கொண்ட கோலக்கின் குடும்பம் ஏழை, கூலி விவசாயிகளோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தது. பிரிட்டிஷாரை எதிர்த்த போராட்டத்தில் உதவி செய்த குடும்பம் என்று கருங்காலிகளான தேசத்துரோகிகள் மூலம் ஆள்பவர்க்குத் தெரிய வருகிறது. அன்று முதல் - ஒவ்வொன்றாக ஆங்கிலேய அதிகாரிகளும், வெள்ளை அவுரி முதலாளிகளும் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

முதலில் கோலக் பாசுவின் பெரிய மகனான நவீன் மாதவை அடித்துத் தூக்கிக் கொண்டு போய் அவுரி பாக்டரியில் வேலை செய்ய வைக்கிறார்கள்; பிறகு அவன் வெட்டிக் கொல்லப்படுகிறான். அடுத்து, கோலக் மீது பொய்க்கேசு போட்டுச் சிறையில் வைக்கிறார்கள்; தன்மானம் பெரிதென்று கோலக் தற்கொலை செய்து கொள்கிறார்;

செய்தியைக் கேட்டு கோலக் மனைவி சாவித்திரிக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. அது முதல் வெள்ளை அதிகாரிகள், அவர்களது மனைவிமார்களைத் தூற்றியபடி வலம் வருகிறார். தற்செயலாக நினைவு தெரியாமல் சொந்த மருமகளையே 'வெள்ளை அதிகாரி மனைவி' என்று சொல்லி கழுத்தை நெறித்துக் கொன்று விடுகிறாள்; மீண்டும் நினைவு தெளிந்ததும், தான் உயிருக்கு உயிராக நேசித்த மருமகளைக் கொன்று விட்டோமே என்று அதிர்ச்சி அடைந்து இறக்கிறாள்.

இடையில் - கோலக்கின் குடும்ப நண்பர் ஏழை விவசாயி சாது சரணின் மகள் கேத்ரோ மணியை அமீனா தூக்கிச் சென்று 'சின்ன - வெள்ளை எசமான்' அனுபவிக்க ஏற்பாடு செய்கிறான். கேத்ரோ மணி வாழ்வை இழக்கிறாள்.

***


படிப்பகம்

www.padippakam.com

முக்கியப் பாத்திரங்கள் மற்றும் அவர்களின் உரையாடல்கள், விவாதங்கள் மூலம் அன்றைய கட்டத்தில் நெற்பயிர் நிலங்கள் அழிக்கப்பட்ட கோரத்தை நாடகம் படம் பிடித்துக் காட்டுகிறது; இங்கு தரப்படும் காட்சிகள் ஒரு சிறு மாதிரி மட்டுமே.

**நீல்தர்பன்** - வலிமையான ஏகாதிபத்திய எதிர்ப்பிலக்கியம் - அது 100 ஆண்டுகள் முந்தையதானாலும் - இன்றைய உலகமயமாதலுக்கு எதிராகப் போராடவேண்டும் என்ற உணர்வைத் தூண்டுகிறது.

இன்றைய மக்கள் எழுச்சிக்கான போராட்ட இலக்கியங்களை - புதிய நீலக் கண்ணாடிகளை அது நம்மிடம் கோருகிறது.

## நாடகத்தில் வரும் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| *கோலக் சுந்தர் பாசு* | : | *நடுத்தர விவசாயி* |
| *நவீன் மாதவ் பிந்து மாதவ்* | : | *கோலக் சுந்தர் பாசுவின் முதல், இரண்டாம் மகன்கள்* |
| *சாது சரண்* | : | *ஏழை விவசாயி* |
| *ரே சரண்* | : | *சாது சரணின் தம்பி* |
| *அமீனா* | : | *நில அளவைக்காரன்* |
| *சாவித்திரி* | : | *கோலக் சுந்தர் பாசுவின் மனைவி* |
| *சொய்ரீந்திரி* | : | *நவீன் மாதவின் மனைவி* |
| *சாருலதா* | : | *பிந்து மாதவின் மனைவி* |
| *ரெபோத்தி* | : | *சாது சரணின் மனைவி* |
| *கேத்ரோ மணி* | : | *சாது சரணின் மகள்* |
| *ஆதுரி* | : | *கோலக் சுந்தர் பாசுவின் வீட்டில் வேலை செய்யும் பெண்.* |
| *போடி மொய்ராணி* | : | *மிட்டாய்க் கடைக்காரி (ஆங்கிலேய அவுரி ஒப்பந்தக் காரர்களுக்காக பெண்களைப் பிடித்துக் கொடுக்கும் வேசி.)* |

### காட்சி - 1

*(ஸ்வரோபூர் - கோலக் சுந்தர் பாசு என்பவரது கிட்டங்கி)*

*(கோலக் சுந்தர் பாசுவும், ஏழை விவசாயி சாது சரணும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)*

**சாது:** ஐயா, நான் அப்பவே சொன்னேனில்ல, இனிமேலயும் இங்க நாம உயிர் வாழ முடியாது. ஏம் பேச்ச எங்க நீங்க எடுக்கப் போறீங்க? எப்பவுமே ஏழையோட பேச்சு நாள்பட்டுதான் பழுத்துப் பலன் தரும்பாங்க.

**கோலக்:** சரண், சொந்த வீட்ட விட்டுப் போறது அவ்வளவு லேசா என்ன? ஏங்குடும்பம் ஏழு தலைமுறையா இங்க இருக்குது. பரம்பரை பரம்பரையா எங்க பாட்டன் முப்பாட்டன் காலத்துலேர்ந்து சேத்து வச்ச நெலம்தான் இன்ன வரைக்கும் நாங்க வெளியில போயி கைகட்டிச் சேவகம் செய்யாம வெச்சிருக்குது. வருசம்பூரா நெல்லு பொன்னா விளையுது. நீதான் பாக்கிறியே, வர்ற விருந்தாளிகளுக்குச் சோறு இல்லேன்னு சொன்னதுண்டா? கோயிலு விழா, பூசை எல்லாத்துக்கும் எப்போ கேட்டாலும் கொடுக்கிறோம்.

ஸ்வரோபூரில் என்னைக்காச்சும் பசி, பஞ்சம்னு சனங்க அலைஞ்சி நீ கேட்டிருக்கியா? இங்கே என்ன கொறைச்சல்? அரிசி, பயறு, எண்ணெய், கரும்பு, வெல்லம், சர்க்கரை, தோட்டத்துலேருந்து காய்கறிங்க... குளத்து நெறைய மீனுங்க.. இவ்வளவு வளப்பமா இருக்கற பூமிய யாராவது விட்டுவிட்டுப் போவாங்களா? அது என்ன அவ்வளவு லேசான காரியமா?

**சாது:** நீங்கதான் இந்த சொர்க்க பூமிய மெச்சிக்கிடணும். சந்தோசம்னு ஒன்னு இங்க உண்டா? இப்ப உங்க தோப்பும், தோட்டமும் உங்க கையில இல்லே. நிலம், பூமி எல்லாம் போயாச்சி. வெள்ளைக்கார துரை சாகேபு வந்து மூணு வருசம் கூட ஆகல்லே - மொத்தக் கிராமத்தயுமில்லே அழிச்சிட்டான். தெக்குத் திசைப்பக்கம் கண்ணத் திருப்பவே மனசு வலிக்குது.

நீங்க சொன்ன மாதிரி ஒரு காலத்துல எப்படி இருந்த பூமி? இப்ப அங்க என்ன மிச்சம் இருக்கு? மண்டல் தலைவர் (ஊர் தலைவர்) வீட்டுப் பக்கம் பாக்க முடியுதா. ஒரு நாளைக்கு அறுபது பேருக்கு விருந்துச் சோறு போட்ட இடமில்லே. பத்து ஏரு கலப்ப, நாப்பது அம்பது உழவு மாடுங்க. அந்த வீட்டு வாசல் பக்கம் எப்பவுமே திருநா கூட்டம்தான். ஒரு குன்று போல குதிர். போன வருசம் அதே குதிர் உடைசலைச் சரி செய்யக் கூட முடியாம முற்றத்துல சரிஞ்சு நொறுங்கி விழுந்து - ஊரே பேசிச்சில்லே ஏன், அப்படி ஏன் நடந்துச்சு? நெல்லு வெளஞ்சி பூமியில போயி அவுரி போடுரான்றான் வெள்ளத்துரை. மஜோவும், சஜோவும் (பெரிய பையன், சிறிய பையன்) செத்தாலும் முடியாது போடான்னாங்க. அப்புறம் அவங்களுக்கு தொரை என்ன தொந்தரவெல்லாம் கொடுத்தான்? எவ்வளவு சித்திரவதைங்க? எத்தனைப் பொய் வழக்கு?

அந்த வெள்ளைத்துரை போட்ட புடியிலேருந்து அவங்களாலே தப்பவே முடியல்லே. நெலம் எல்லாம் போயி, ஏரு - கலப்ப - மாடு எல்லாம் போயி கடேசியா அவுங்க கிராமத்த விட்டே போயிடல்லே... நான் மறுபடி சொல்றேன் கேளுங்க. சொந்த மாடு, சொந்த ஊருங்கற இந்தப் பந்தத்த விட்டுத் தள்ளுங்க. அய்யா, இது மாயா லோகம். போன முறை உங்க அரிசி போச்சி, இந்தமுறை உங்க மானம், மரியாதை போகும்.

> **"நீலக்கண்ணாடி" - ஆங்கிலேய அவுரிப் பயிர் முதலாளிகளின் கொள்ளையை உலகின் முன் பிரதிபலித்த கண்ணாடி. 100 ஆண்டுகள் முன் எழுதப்பட்டிருந்தாலும் - இன்றைய உலகமயமாதலுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வை இது தூண்டுகிறது.**

**கோலக்:** இப்ப மட்டும் என்ன மானம் மிஞ்சியிருக்குதாம்? குளத்தைச் சுத்தி அவுரி நிலமா மாத்திக்கிட்டு வராங்க. இந்த முறை அவுரி போட்டுருவான் தொரை, அப்புறம் நம்ம வீட்டுப் பொம்பளைங்க குளத்துப் பக்கம் தண்ணி எடுக்கப் போக முடியாது. தொரை என்ன சொன்னான் - "இந்த முறை எல்லாரும் கழனியிலே அவுரி போடப் போறீங்களா, இல்லே நவீன் மாதவ ஏழு பாக்டரியோட



படிப்பகம்

www.padippakam.com

தண்ணியக் குடிக்க வெக்கட்டுமா?'' சாய பாக்டரியிலே நவீன்மாதவ மடக்கிப் போட்டுருவானாம். ஏம்புள்ளைக்கி வந்த கதியப் பாத்தியா?

**சாது:** மூத்தவரு பாக்டரியிலதானே இருக்காரு?

**கோலக்:** மாட்டேன்னுதான் சொன்னான். ஒரு அடியாள வச்சி குண்டு கட்டால்ல தூக்கிட்டுப் போனாங்க.

**சாது:** இருந்தாலும் அவருக்கு ரொம்பத் துணிச்சல். தொரை வந்து சொன்னானாம். ''அமீன் சொல்ற பேச்சக் கேளு. நாங்க கோடு போட்ட எடத்துல அவுரியப் பயிர் செய். இல்லேன்னா ஒங்க வீடுங்கள ஒடச்சி பெத்ரோவதி ஆத்துலே வீசிப்புடுவேன். அப்புறம் சாய பேக்டரி கோடவுணிலே தான் சோறு திங்கணும்.'' அதுக்கு இவரு என்ன சொன்னாராம் - ''போன வருசம் அவுரிப் பயிர் வெச்ச 17 ஏக்கர் நெலத்துக்கு காச முதல்ல கொடு. இந்த முறை ஒரு கால்துண்டு கூட அவுரி பயிர் செய்ய மாட்டோம். எங்க உசுரே போனாலும் பரவா யில்லே...''

**கோலக்:** அவன் வேற என்ன சொல்ல முடியும்? 17 ஏக்கர் நிலத்துல நெல்லுப் பயிர் வச்சிருந்தா இந்த கஷ்டம் இருந்திருக்குமா? வெச்ச அவுரிக்குப் பணம் கொடுத்திருந்தாக் கூட வேதனை தொலைஞ்சிருக்குமே.

*(நவீன் நுழைகிறான்)*

**கோலக்:** மகனே வா, என்ன நடந்தது சொல்லு?

**நவீன்:** அவன் மண்டையில ஒன்றுமே ஏறல்ல. தாய் மடியில் இருக்கிற குழந்தையைக் கொத்தினா தாய்க்கு அதை விடப் பெரிய சோகம் இல்லைன்னு ஒரு பாம்பு அச்சப்பட்டு, தயங்கி என்னைக்காவது குழந்தையைக் கொத்தாம இருந்ததுண்டா?

அவனுக்கு எதுவுமே புரியவில்லை. அந்தப் பதினேழு ஏக்கரா நிலத்த எங்களுக்கு எழுதிக் கொடுங்க; அம்பது ரூபாய் வாங்கிக்குங்க. முந்தின ரெண்டு வருசக் கணக்கையும் ஒரே நொடியில பைசல் செஞ்சிடலாம் அப்படிங்கறான்.

**கோலக்:** இருக்கிற நிலத்த எல்லாம் அவுரி பயிரிடக் கொடுத்துப்புட்டா வேற என்ன விவசாயம் செய்யிறது? சோத்துக்கு எங்கே போவது? சாகவேண்டியதுதான்.

**நவீன்:** நான் எவ்வளவோ சொல்லிப் பாத்தேன்: ''ஐயா, எங்களோட கூலி ஆளுங்களயெல்லாம் புடுங்கிக்கிட்டீங்க. ஏரு, கலப்ப, மாடு எல்லாத்தையும்



எடுத்துக்கிட்டீங்க. அவுரி, அவுரி.,... அவுரி மட்டும்தான் விவசாயன்னுட்டீங்க - எங்களுக்கு நீங்க ஒன்னும் தர வேண்டாம். வருசம் பூரா வயிறு நெறைய எங்க குடும்பங்களுக்குச் சோறு போடுங்க போதும்'' அதுக்கு அவன் நக்கலா பதில் சொல்றான் - ''நீங்கதான் வேத்து மதத்து ஆளுங்க வீட்டுல சமைச்சதைச் சாப்பிட மாட்டீங்களே''

**சாது:** கூலியா வெறும் சோறு வாங்கித் திங்கிறவன் பாடு நம்மளவிட எவ்வளவோ மேல்!

**கோலக்:** எல்லாக் கலப்பையையும் கொடுத்து விட்டோம். இருந்தாலும் அவுரிதான் பயிரிடணுமாம். அந்தத்தொரமார்களோட தகராறுக்கெல்லாம் போக முடியுமா? கட்டி வெச்சுத் தோலை உரிச்சு உப்புக் காப்பு போட்டுருவான். வேற வழியே இல்ல;

**நவீன்:** அப்பா, நீங்க என்ன சொல்றீங்களோ அதை நான் செய்யறேன்; என்னக் கேட்டீங்கன்னா, கோர்ட்டுக்குப் போயி ஒருமுறை மோதிப் பாத்துரலாம்.

***

**காட்சி 2**

*(அமீனா தொலைவில் வருகிறான். தெருவில் போவோர் முணுமுணுக்கின்றனர்)*

டேய், வில்லன் வந்துட்டான்டா. கூடவே அடியாளுங்க வராங்க. நம்மள சாய பேக்டரிக்கு அள்ளி எடுத்துக்கிட்டு போகப் போறான். ஓடிருங்க.. ஓடிருங்க...

(சாது சரணின் மனைவி ரெபோத்தியும், அவள் மகள் கேத்ரோமணியும் தண்ணீர் குடத்தோடு வரவும், வாசலில் நின்றிருக்கும் சாதுசரணின் தம்பி ரே சரண் தண்ணீர் கேட்கிறான். பசித்த வயிற்றுக்குச் சோறு இல்லை; தண்ணீராவது குடிக்கத் தவிக்கிறார்கள். குடங்களைத் திண்ணையில் இறக்கி வைத்தவர்கள் அமீனா என்ன சொன்னான் என்று விசாரிக்கிறார்கள். காசு கூடத் தருகிறேன் என்று ரே சொல்லியும், தான் கோடு போட்ட பூமியில் அவுரி போடவில்லையானால், நடப்பதே வேறு என்று அமீனா மிரட்டியதையும், தான் கோர்ட்டுக்குப் போவதாகச் சொல்லி வந்து விட்டதையும் சொல்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

*(இதற்குள் அந்த வீட்டின் அருகே அமீனா வந்து விடுகிறான்)*

**அமீனா:** அந்தப் பய எங்கடா? ரே சரணா, பேய் சரணா - அந்த வில்லனைப் புடிங்கடா....

(அமீனாவின் அடியாட்கள் ரே சரணைப் பிடித்து இழுத்து நடுத்தெருவில் கொண்டு போய் நிறுத்தி அவனது கைகளை முதுகுப் பக்கம் சேர்த்துக் கட்டுகிறார்கள்.)

**ரெபோத்தி:** ஐயோ, ஐயோ, என்ன அநியாயம்யா இது? எதுக்கய்யா இப்படிச் செய்யிறீங்க. ஐயோ, என்ன போதாத காலம். ஐயா, ஐயா, யாராச்சும் ஓடி வாங்களேன்.

*(உள்ளே படுத்திருந்த சாதுசரணை வெளியே வரச் சொல்கிறாள் ரெபோத்தி)*

போங்க, கோலக் பாபு வீட்டுக்குப் போங்க. நவீன் இருக்கானான்னு பாருங்க. கையோட கூட்டிட்டு வாங்க.

**அமீனா:** அதெல்லாம் அப்புறம் ஆகட்டும்டா, ஏ... சாது... நீயும் இவன்கூட வா. ஒனக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியுமே. சாய பேக்டரிக்கு வந்து கையெழுத்துப் போடலாம் வா... முன்பணம் தர்றேண்டா...

**சாது:** இதப்போயி அவுரிக்கான முன் பணம்னு சொல்றீங்களே. அதுக்கு முன்னாடியே எங்களோட பொணம் விழுந்துரும்போல இருக்குதே. அவுரியப் போட்டுப் போட்டு நாட்டையே அழிச்சிட்டீங்களே....

**அமீனா:** *(கேத்ரோ மணியைப் பார்த்து விடுகிறான். தனக்குத்தானே பேசிக் கொள்கிறான்).* அடடே, இப்படி ஒரு சொர்ண விக்கிரகம் இந்த வீட்டுல இருக்குதா? தெரியாம போயிட்டுதே. சின்ன தொரைக்கு இவ கெடைச்சா நிச்சயம் ஏத்துக்குவாரு. ஆனா... என்னோட சொந்த தங்கச்சிய கொடுத்துச் சரிகட்டி பேஷ்கார் (கங்காணி) வேலை வாங்கலாம்னா அதுவே முடியலே. இவளக் கொண்டுபோய்க் கூட்டிக் கொடுத்து என்ன செய்யிறது?... எப்படி வேணும்னாலும் சொல்லு, இவ ரொம்ப ரொம்ப அழகுதான். முயற்சி செஞ்சி பாப்பம். விழுந்தா மாங்கா, இல்லேன்னா....

**ரெபோத்தி:** *(அமீனாவின் அலையும் கண்களைப் பார்த்து விடுகிறாள்)* கேத்ரோ மணி, நீ வீட்டுக்குள்ளே போ!

*(கேத்ரோ மணி உள்ளே போகிறாள்)*

**அமீனா:** இதப்பார் சாது, ஒழுங்கா நடந்துக்க, என்னோட சாய பேக்டரிக்கு வா!

*(ரெபோத்தி முறையிடுகிறாள்; இன்னமும் சோறு கூடத் திங்காத வயித்தோட இழுத்துக் கொண்டு போகிறார்களே என்று வசை பாடுகிறாள்; அவர்கள் கொஞ்சம் தண்ணீராவது குடித்துவிட்டுப் போகட்டும் என்று கெஞ்சிப் பார்க்கிறாள்)*

*(அமீனா — ரே சரண், சாது இருவரும் தண்ணீர் குடிக்க அனுமதிக்கிறான்)*

*(ரெபோத்தி அழுகிறாள்)*

*(ரே, சாது, அமீனா போதல்)*

***

### காட்சி 3

**ரெபோத்தி:** அம்மா, அம்மா ஏந்தலை மேலே இடி விழுந்துடுச்சேம்மா. அந்த பாழாப் போன போடி மொய்ராணி நேத்து நம்ம வீட்டுக்கு வந்திருந்தா...

**சாவித்திரி:** கடவுளே அந்தப் பிசாசை யார் உள்ளே விட்டது? ஊரறிஞ்ச சிறுக்கில்லே அவ...

**ரெபோத்தி:** நவீன் அம்மா, ஐயோ அத நெனச்சா மனசே கூசுது. அவ சொல்றா, அந்தச் சின்ன தொரைக்கு கேத்ரோ மணி பேரில பைத்தியமே புடுச்சிருச்சாம்.. பாக்டரிக்கு அவ உடனே வரணுமாம்.

**ஆதூரி:** *(நவீன் வீட்டு வேலையாள்);* அந்தக் கொலை பாதகன்கிட்டேயா? யாரு போவா? போய் மானத்தோட திரும்ப முடியுமா?

**ரெபோத்தி:** ஐயோ, அம்மா... ஏழைகளுக்கு ஒழுக்கம்தானே ஒரே செல்வம்? அந்தச் சிறுக்கி சொல்றா... சின்ன தொர காசு தருவானாம். நிலம் தருவானாம்; மருமகனுக்கு வேலை தருவானாம். கற்புங்கிறது வெலைக்கு விக்கன்னு நெனச்சானா அந்தப் பொறம்போக்கு? நேத்து இதக் கேட்டதிலேருந்து என்னோட அருமைப் பொண்ணு கேத்ரோ மணி பேயறைஞ்சது போலக் கிடக்குறா. திடீர்னு தூக்கிவாரிப் போட்டு நடுங்குறா? நாங்க இவள அனுப்பலேன்னா.. .அடியாளுங்களோட வந்து தூக்கிக்கிட்டுப் போயிடுவானாம்... ஐயோ...

**சாவித்திரி:** நிதானமாச் சொல்லு...

**ரெபோத்தி:** ஐயோ அம்மா. சம்சாரி வீட்டுல பூந்து யாருவேணா கொடுமை பண்ணலாம்னு ஆயிடுச்சே.. அவுரிப் பயிர் வெக்க முன்பணம் தர்றேன்னு சொல்லி எதவேணா பண்றான். அவங்களுக்கு வெறி வந்துச்சின்னா தலைகால் தெரியாம குதிக்கிறாங்க. போன மாசம் அப்படித்தான் முன் பணம் வாங்கினதா பொய்ச் சீட்டுல கையெழுத்துப் போட மாட்டேன்னாருன்னு அரி வீட்டுக் குள்ளே புகுந்து அவரு பொண்டாட்டியைப் பலவந்தமா தூக்கிக்கிட்டுப் போயிட்டாங்க...

**சாவித்திரி:** அராசகமால்லே இருக்கு? சாதுசரண் கிட்ட சொன்னியாம்மா?

**ரெபோத்தி:** இல்லேம்மா அவுரிப் பயிரப் பத்திப் பேசினாலே அவரு பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆயிடுறாரு. இத வேறக் கேட்டாருன்னா, சும்மாவா இருப்பாரு.. கோபம் தலைக்குமேல போயிருச்சின்னா, கோடாலி எடுத்துத் தன்னோட தலையையே வெட்டிக்கிட்டுச் செத்துப் போவாரு.

**சாவித்திரி:** இவனுகள போயி தொர சார், தொர சாருங்கறாங்களே நாய்ப் பயலுங்க.

**ரெபோத்தி:** இன்னொரு புதுச்சட்டம் போட்டுருக்காங்களாம். உங்க பெரிய மவனுக்கு இன்னமும் தெரியாதுன்னு நெனைக்கிறேன். மேஜிஸ்டிரேட்டுக்கு சும்மா ஒரு தகவல் சொல்லியனுப்பி விட்டு யாரை வேண்டுமானாலும் ஆறு மாசம் ஜெயிலுக்குள்ளே தள்ளிடலாமாம். உங்க வீட்டுக்காரரையும் உள்ளே தள்ள ஏற்பாடு செய்யப் போறாங்கன்னு பேசிக் கிடறாங்க...

**சாவித்திரி:** *(பெருமூச்சு விட்டவாறு)* கடவுள் விட்ட வழி ஆகட்டும்மா.

**ரெபோத்தி:** அந்தத் தேவடியாச் சிறுக்கி மொய்ராணி, பாழாப் போறவ, சொன்ன பல விசயம் புரியவே இல்லம்மா... இப்படி ஒருமுறை செயிலுக்குள்ளே தள்ளினா, அதுக்கு மேல் முறையீடு கூட செய்ய முடியாதாமே?...

**சாவித்திரி:** ரெபோத்தி, சீக்கிரமா வீட்டுக்குப் போ, இருட்டிக்கிட்டு வருது. இதுக்கு ஒரு வழி யோசிப்போம். அய்யா கிட்டயும், சாதுகிட்டயும் நானே நிதானமா சொல்றேன்.

**ரெபோத்தி:** போய் வர்றேம்மா... கடையிலிருந்து கொஞ்சம் எண்ணெய் வாங்கணும்... அப்பத்தான் விளக்கைக் கொளுத்த முடியும்.

*(ரெபோத்தி, வேதனையுடன் நகருகிறாள்)*

●


படிப்பகம்

www.padippakam.com

# புரட்சித் தலைவி வழங்கும் கள்ளச்சந்தையே வெள்ளைச் சந்தை

**சினிமா அரசியல் திருடர்களின் கூட்டுத் தயாரிப்பு**

உற்பத்தியான நெல்லும் துணியும் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கையில், முதல்வருக்கு தேங்கிக் கிடக்கும் படப் பெட்டிகளைப் பற்றிக் கவலை. சினிமா முதலாளிகள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லையே என்ற கவலை.

உற்பத்தியாகும் திரைப்படங்களையெல்லாம் அரசே கொள்முதல் செய்ய வாய்ப்பில்லை என்பதால் கட்டணச் சீட்டுகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமையை சினிமாக் கொட்டகை அதிபர்களுக்கே வழங்கிவிட்டார் ஜெயலலிதா.

''தமிழ்ப் புத்தாண்டு (ஏப்ரல்-14) முதல் திரையரங்க அதிபர்கள் கட்டணத்தை 75 சதவீதம் உயர்த்திக் கொள்ளலாம்; படம் திரையிடப்பட்ட முதல் இரண்டு வாரங்களுக்கு எந்தவித உச்சவரம்புமின்றி விருப்பப்படி கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம்; இந்த வசூல் கொள்ளை எதற்கும் வரி கிடையாது; மொத்த இருக்கைகளில் 20 சதவீதம் கடைசி வகுப்புக்கு ஒதுக்க வேண்டும் என்பதை 10 சதவீத இருக்கைகளாகக் குறைத்துக் கொள்ளலாம்'' என்பது புதிய அரசாணை.

சட்டமன்றத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்ட ஜெயலலிதா, திரையுலகிற்குக் கருணாநிதி செய்த 'துரோகத்தை' சுட்டிக் காட்டவும் தவறவில்லை. ''திரையரங்க அனுமதிச் சீட்டுகள் கள்ளச்சந்தையில் விற்கப்படுவதைத் தடுப்பதற்கு, திரையரங்குகள் கட்டணத்தைத் தாமே உயர்த்திக் கொள்ள அனுமதி வழங்கி கடந்த அ.தி.மு.க. ஆட்சி ஆணை பிறப்பித்தது. பின்னர் வந்த தி.மு.க. இந்த ஆணையை மாற்றியது. இதனால் திரைப்படத்துறை பெருத்த சரிவைச் சந்திக்க நேரிட்டது. நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் திரைத்துறையினர் என்னைச் சந்தித்து இதுபற்றி முறையிட்டனர். அந்த அடிப்படையில் தற்போது இந்த அரசாணை பிறப்பிக்கப்படுகிறது'' என்றார் ஜெயலலிதா.

மறுநாளே வந்தது கருணாநிதியின் பதில். 54 சதவீதம் இருந்த கேளிக்கை வரியை 25 சதவீதமாகக் குறைத்தது தி.மு.க. ஆட்சிதானென்றும், திரைப்படத் துறையினருக்கு மனச்சாட்சி இருந்தால் துரோகம் இழைக்கப்பட்டதாக ஜெயலலிதா கூறியதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் குமுறியிருக்கிறார்.

''மக்களை நேரடியாகக் கொள்ளையடிக்கும் வாய்ப்பை வழங்கியது நான்தான்'' என்கிறார் ஜெயலலிதா. ''திரையுலக முதலாளிகளுக்கு அரசு கஜானாவைத் திறந்து விட்டது நான்தான்'' என்கிறார் கருணாநிதி.

திரையரங்க முதலாளிகளோ திருப்தியடையவில்லை. மொத்த இருக்கைகளைக் கணக்கிட்டு வசூலிக்கப்படும் காம்பவுண்டு வரியை ரத்து செய்து விட்டு விற்பனையான சீட்டுகளுக்கு மட்டும் வரி வசூலிக்க வேண்டுமென்றும், திரையரங்கப் பராமரிப்புக்காக இரண்டு ரூபாய் சேர்த்து வசூலிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் கோரியுள்ளனர்.

***

மூணரை ரூபாய் அரிசிக்கு மக்கள் தவித்துத் தவம் கிடக்கும் நாட்டில், 300 ரூபாய் கொடுத்து ரஜினி படத்தை முதல் வாரத்தில் பார்க்கப் போகும் ரசிகன் என்ற பிராணியை எதைக் கொண்டு அடித்தாலும் தகும் என்பதில் இருவேறு கருத்தில்லை. அவனுக்கு நியாய விலையில் சினிமா டிக்கெட் வாங்கித் தருவது நம் நோக்கமுமல்ல.

அநியாய விலையில் சீட்டை விற்றாவது சினிமாத் தொழிலையும் திரையரங்குகளையும் காப்பாற்றத் துடிக்கும் புரட்சித் தலைவியின் தாயுள்ளம்தான் நமது பிரச்சினை.

**நேற்றைய கிரிமினல் இன்றைய முதல்வரானதைப் போல, நேற்றைய சட்ட விரோதமான பிராந்திக் கடை 'பார்' இன்று சட்டபூர்வமாகி விட்டதைப் போல சினிமாவிலும் கறுப்பு வெள்ளையாகிவிட்டது.**

இந்தப் புதிய உத்தரவின் படி இதுகாறும் கள்ளச் சந்தை என்றும் பிளாக் டிக்கெட் என்றும் அறியப்பட்டவை இனி வெள்ளைச் சந்தையாகும். நேற்றைய கிரிமினல் இன்றைய முதல்வரானதைப் போல, நேற்றைய சட்டவிரோதமான பிராந்திக் கடை 'பார்' இன்று சட்டபூர்வமாகி விட்டதைப் போல சினிமாவிலும் கறுப்பு வெள்ளையாகிவிட்டது.

சினிமாக் கொட்டகை வாசல்களில் ரகசியமாகவும் போலீசுக்குப் பயந்தும் விற்பது போன்ற பாவனையுடன் நடைபெற்று வந்த பிளாக் டிக்கெட் விற்பனை முடிந்தது. பிளாக்கில் டிக்கெட் விற்பவர்களுக்கு இதுநாள்வரை கொடுத்து வந்த கமிசன் தொகையையும் திரையரங்க முதலாளிகளே இனி எடுத்துக் கொள்வார்கள்.

தொழில் முறை பிளாக் டிக்கெட் விற்பனையாளர்களுக்கும், ரஜினி, கமல், விஜயகாந்த் ரசிகர் மன்றத்தினருக்கும் கிடைத்து வந்த வருவாயை திரையரங்க முதலாளிகளும், விநியோகஸ்தர்களும், சம்பந்தப்பட்ட நட்சத்திரங்களும் தட்டிப் பறித்து விட்டனர்.

ஓட்டுக் கட்சி அரசியல் முதல் சினிமா முதலான தொழில்கள் வரை பலவற்றிலும், கீழ் மட்டத்தில் இதுகாறும் அனுபவித்து வந்த ''பொறுக்கித் தின்பதற்கான ஜனநாயக உரிமை'' கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்கப்பட்டு வருகிறது.

''நாடு சுதந்திரம் பெற்ற பின் முதன் முறையாக சினிமா டிக்கெட் விலையை நிர்ணயம் செய்து கொள்ளும் உரிமை, திரையரங்க உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் இத்துறையைக் காப்பாற்றிய முதல்வருக்கு நன்றி'' என்று திரையரங்க உரிமையாளர் சங்கம் முதல்வருக்கு ஜே போட்டுள்ளது; அல்லது 'ஜெ'க்கு 'ஓ' போட்டுள்ளது. ரஜினி, விஜயகாந்த் உள்ளிட்ட கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் நடிகர்கள், பெரிய திரைப்பட நிறுவனங்கள், விநியோகஸ்தர்கள் ஆகிய அனைவரும் ஜெவுக்கு 'ஓ' போட்டு விட்டனர்.

சினிமாத் தொழிலின் நசிவுக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ''தொலைக்காட்சித் தொடர்களில் மக்கள் கட்டுண்டு கிடப்பதனால் சினிமாக் கொட்டகைக்கு வருவதில்லை; புதிய சினிமாக்களைக் கூட தொலைக்காட்சியில் உடனுக்குடன் ஒளிபரப்பி விடுவதால் மக்கள் தியேட்டருக்கு வந்து காசு கொடுப்பதைவிட செலவில்லாமல்


படிப்பகம்

www.padippakam.com

தொலைக்காட்சியில் படம் பார்த்து விடுகிறார்கள்; புதிய படங்கள் வெளியானவுடனேயே திருட்டு சி.டி.க்களும் வெளியாகி விடுவதால் மக்கள் குறைந்த செலவில் சி.டி.யில் படம் பார்த்து விடுகின்றனர்; இத்தகைய சூழ்நிலையில் திரைப்படங்களின் தயாரிப்புச் செலவும் கூடிக் கொண்டே போவதால் நட்டம் அதிகமாகிறது.'' - இவை திரையுலகத்தினர் கூறும் காரணங்கள்.

மேற்கண்ட பிரச்சினைகளைச் சமாளிக்க ''நட்சத்திரங்கள் தொலைக்காட்சிக்குப் பேட்டி கொடுக்கக் கூடாது'' என்று முடிவெடுத்தனர். இவர்களுடைய மூஞ்சியை (அல்லது உடம்பை) இலவசமாக தொலைக்காட்சியில் பார்க்கும் வாய்ப்பு இருக்கும் வரை, அந்த மூஞ்சியை காசு கொடுத்துப் பார்க்க எவனும் சினிமாக கொட்டகைக்கு வர மாட்டான் என்ற அச்சத்தினால் வந்த முடிவு அது. விப்சாரத்தின் இன்னொரு வடிவம்தான் இன்றைய சினிமா என்பதற்கு இந்த முடிவு இன்னுமொரு சான்று. ஆனால் இந்த முடிவுக்கு நடிகர் நடிகைகளே கட்டுப்படவில்லை.

புதிய படத்தின் தொலைக்காட்சி உரிமையை உடனே விற்பனை செய்யக் கூடாது என்ற முடிவெடுத்தனர். இதற்கு தயாரிப்பாளர்கள் கட்டுப்படவில்லை. தான் போட்ட முதலுக்கு லாபத்தை உடனே பார்ப்பது எப்படி என்றுதான் தயாரிப்பாளன் கவலைப்படுவானேயன்றி சினிமாத் தொழிலைப் பாதுகாத்துத் தூக்கி நிறுத்துவது எப்படி என்று எவனும் கவலைப்படுவதில்லை.

'டாப் டென்' என்ற பெயரில் தங்களது புதிய படங்களிலிருந்து காட்சியை எடுத்துப் போட்டுவிட்டு, பிறகு அந்தப் படங்களையே கால்மேல் கால் போட்டு உட்கார்ந்து 'கண்டபடி' விமர்சிக்கிறார்கள் என்று தொலைக்காட்சிகளை (குறிப்பாக சன்) திட்டினார்கள். எவ்வளவுதான் திட்டினாலும் நெல்லிக்காய் மூட்டையான இந்த சினிமாக்காரர்களை தொலைக்காட்சி ஏகபோகமான 'சன் டி.வி.' கால்தூசுக்குக் கூட மதிப்பதில்லை.




''மக்களை நேரடியாகக் கொள்ளையடிக்கும் வாய்ப்பை வழங்கியது நான்தான்'' என்கிறார் ஜெயலலிதா. ''திரையுலக முதலாளிகளுக்கு அரசு கஜானாவைத் திறந்து விட்டது நான்தான்'' என்கிறார் கருணாநிதி.

திருட்டு சி.டி.யைத் தனியார் ரவுடிகளை வைத்துத் தடுத்துப் பார்த்தனர். முடியவில்லை; திருட்டு சி.டி.யை தயாரித்துத் தருவர்கள் சினிமா புள்ளிகள். விற்பனை செய்பவர்கள் சர்வகட்சிகளையும் சேர்ந்த கிரிமினல் கும்பல்கள்.

போலீசு உயர் அதிகாரிகளுக்குக் காசு கொடுத்து உள்ளூர் கேபிள் தொலைக் காட்சிக்காரர்கள் மீது ரெய்டு நடத்த சினிமா முதலாளிகள் ஏற்பாடு செய்தால், கேபிள் கம்பெனிக்காரனிடம் காசு வாங்கிக் கொண்டு அவர்களுக்குப் 'பாதுகாப்பு' வழங்குகிறார்கள் உள்ளூர் போலீசுகாரர்கள்.

**எ**ஞ்சியிருக்கும் விசயம் ஒன்றே ஒன்றுதான். அது தயாரிப்புச் செலவைக் குறைப்பது பற்றிய பிரச்சினை. திரைப் படத் தயாரிப்புக்குத் தேவையான பொருட்கள், அடிப்படைச் செலவினங்கள், தொழிலாளர்களின் கூலி இவையெல்லாம் உயர்ந்துவிட்டதனால் தயாரிப்புச் செலவு கூடிவிடவில்லை.

தயாரிப்புச் செலவு கூடுவதற்கு முக்கியக் காரணம் நட்சத்திரங்களின் சம்பளம் மற்றும் ஊதாரித்தனமான தயாரிப்புச் செலவுகள். பாரதிராஜா ஒரு சமீபத்திய பேட்டியில் கூறியுள்ளது போல, மொத்தத் தயாரிப்புச் செலவு 8 கோடி ரூபாய் என்றால், அதில் நட்சத்திரங்களின் சம்பளம் 5 கோடி.

வெளிப்புற, வெளிநாட்டுப் படப்பிடிப்புகள், சண்டைக்காட்சிகளில் எரியும் கார்கள், நடனக் காட்சிகளின் செட்டிங்குகள், ஆடம்பரமான நட்சத்திர ஓட்டல் விருந்துகள், விளம்பரங்கள் ஆகியவற்றுக்கு மீதமுள்ள 3 கோடியில் கணிசமான தொகை போய்விடும்.

சம்பளம் என்ற பெயரில் நட்சத்திரங்கள் அடிக்கும் பகற்கொள்ளையையும், வித்தியாசமான காட்சியமைப்புகள் என்ற பெயரில் செய்யப்படும் ஆபாசமான ஊதாரிச் செலவுகளையும் குறைத்தால் சினிமாத் தொழிலைக் காப்பாற்றி விடலாம் என்பது சில சினிமாக்காரர்களே கூறும் பொருளாதாரக் கணக்கு.

ஆனால் கதை என்ற பெயரில் அரைத்த மாவையே வித்தியாசமாக அரைக்கின்ற வரையில், நட்சத்திரக் கொள்ளையிலிருந்தும் ஊதாரிச் செலவுகளிலிருந்தும் தப்பிக்கவே முடியாது என்பது திரையுலகின் கலாச்சாரக் கணக்கு.

இந்த இரண்டாவது கணக்குதான் முதல் கணக்கை ஆட்சி செய்கிறது. எம்.ஜி.ஆர், சிவாஜி முதல் இன்று ரஜினி, கமல், விஜய், அஜித் போன்ற கோடி ரூபாய் நட்சத்திரங்களையும், அவர்களுடைய ரசிகர் மன்றங்களையும் உருவாக்கியதில் இந்த பார்முலா கதைகளின் பங்கு முக்கியமானது.

**நு**கர் பொருள் சந்தையில் கோக், பெப்சி, ஹுண்டாய், தாம்சன் என்று பிராண்டுகளைத் தமது பொருளாதார வலிமையால் உருவாக்கி, விளம்பரம் என்னும் கலாச்சாரத் தாக்குதல் மூலம் அவற்றை நிலைநிறுத்துகின்றன பன்னாட்டு நிறுவனங்கள்.

திரையுலகிலோ பார்முலாக் கதைகள் எனும் கலாச்சாரத் தாக்குதலினூடாக உருவான பிராண்டுகளான இந்த நட்சத்திரங்களை, பொருளாதார வலிமை கொண்ட பெரிய சினிமா முதலாளிகள் தத்தெடுத்துக் கொள்கின்றனர்.

இத்தகைய நட்சத்திர உருவாக்கத்தில் இவர்களுடன் இணைந்து வேலை செய்கின்றன பிற தகவல் ஊடகங்கள். மூன்று மாதம் வேலை செய்தால் மூன்றாண்டுகள் ஓய்வு எடுக்கும் ஒரு முழுச் சோம்பேறியை 'சூப்பர் ஸ்டார்' என்று ஒரு கூட்டம் கொண்டாடுகிறதென்றால் அதற்கு முக்கியக் காரணம்


படிப்பகம்

www.padippakam.com

பத்திரிகைகள். கடந்த 4 மாதங்களில் வந்த நாளிதழ்கள் வார இதழ்களை ஒருமுறை புரட்டிப் பாருங்கள்.

பாபா கதை என்ன, பாபா கதையில் அரசியல் பஞ்ச், பாபாவுக்கு கதாநாயகி யார், பாபா படத்தை கவிழ்க்க ஜெயலலிதா சதி, பாபா காலில் தாயத்துக் கட்டியிருக்கும் மர்மம், பாபாவைப் பெண்கள் விரும்புவது ஏன், பாபா இரண்டு விரல்களைக் காட்டுவதன் பொருள் என்ன, பாபாவுக்குப் பொருத்தமான வசனங்களை எழுதியனுப்ப வாசகர் போட்டி - அதற்கு ரஜினி பரிசு, பாபா ப்ளோ அப் என்று.... எங்கும் பாபா, எதிலும் பாபா.




இது பத்திரிகைகளின் விற்பனைத் தந்திரம் மட்டுமல்ல; பத்திரிகைகளின் விற்பனைக்கு நட்சத்திரங்களும் சினிமாச் செய்திகளும் எவ்வளவுக்குத் தேவைப்படுகின்றனவோ, அதே அளவுக்கு சினிமாவின் விற்பனைக்கு பத்திரிகைகள் தேவைப்படுகின்றன. விலைமாதுவுக்கும் தரகனுக்கும் இடையிலான உறவைப் போன்றது இது.

''உன்னைக் காட்டி என்னை விற்றுக் கொள்கிறேன் - என்னைக் காட்டி உன்னை விற்றுக் கொள்'' என்பதுதான் இவர்களுக்கிடையிலான தொழில் ஒப்பந்தம். ரஜினி, கமல், விஜய், அஜித் போன்ற நட்சத்திரங்களின் படங்கள் வெளிவருவதற்கு முன்னால் பத்திரிகைகள் செய்யும் வேலையின் பொருள் என்ன? கள்ளச் சந்தை வியாபாரத்துக்கு சினிமாக் கொட்டகையில் கூட்டம் திரட்டித் தரும் வேலை தான் அது.

சினிமாவுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையிலான கூட்டு என்பது உலகெங்கும் உள்ள விசயம்தான். ஆனால் இதில் அரசியல் வாதிகளின் நேரடிக் கூட்டு தமிழகத்தின் சிறப்பு. ''படையப்பா முந்தைய வசூல் சாதனைகளையெல்லாம் உடையப்பா'' என்று முன்னர் ரஜினியை வாழ்த்தினார் கருணாநிதி. கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்றால்தான் வசூல் சாதனையை உடைக்க முடியும் என்பது கருணாநிதிக்குத் தெரியாததல்ல. படையப்பாவின் டிக்கெட்டுகள் போலீசு பாதுகாப்புடன் 400, 500 ரூபாய்க்கு விற்கப்பட்டதும் தமிழகம் அறியாததல்ல.

தற்போதைய அரசாணை காரணமாகவும், திருட்டு சி.டி.க்களுக்கு எதிராக ஜெயலலிதா அரசு எடுத்து வரும் 'கடுமையான' நடவடிக்கைகள் காரணமாகவும் தமிழ்ப் புத்தாண்டில் வெளியான எல்லாப் படங்களும் லாபகரமாகப் போய்க் கொண்டிருப்பதாகத் திரையுலகம் மகிழ்ச்சியிலிருக்கிறதாம்.

சாராயம் குடித்துக் குடல் வெந்து சாவதாக இருந்தாலும் லேபிள் ஒட்டிய சாராயம் குடித்துத்தான் சாகவேண்டும்; ''மட்டரகமான படத்தைப் பார்த்து விட்டுக் காறித்துப்புவதாக இருந்தாலும் 50, 100 கொடுத்து விட்டு அப்புறம் காறித்துப்பு'' என்கிறது ஜெ. அரசு. (காறித்துப்பினால் அதற்கு அபராதம் தனி). யார் தாலி அறுத்தாலென்ன, தங்களுக்கு லாபம் என்று அகமகிழ்ந்திருக்கிறார்கள் சினிமாக் கழிசடைகள்.

இந்த மகிழ்ச்சி நீடிக்க முடியாது. எல்லாத் திசைகளிலிருந்தும் சுற்றி வளைத்து கண், காது, மூக்கு, தொண்டை என எல்லா துவாரங்களின் வழியாகவும், சினிமாவைக் குத்தித் திணித்தாலும் வயிற்றுக்குச் சோறு தின்ற பின்னால் தானே மக்களால் சினிமாவுக்குக் கப்பம் கட்ட முடியும்!

இந்தக் கட்டண உயர்வுக்குப் பிறகு சினிமாக் கொட்டகைகளில் கூட்டம் குறைந்து விட்டால் ''மாதம் இரண்டு படமாவது பார்க்கத் தவறும் தமிழர்களுக்கு தண்டனை'' என்று சட்டம் போடச் சொல்லி புரட்சித் தலைவியிடம் கோருவார்கள் நட்சத்திரங்கள். ''ஓட்டுப் போடாத மக்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்'' என்று பா.ம.க தலைவர் ராமதாசு கூற வில்லையா? அதுபோலத்தான்.

● சூரியன்

## வேறு தொழில் தெரியாதாம்!

**மக்கள் ரேசன் அரிசிக்கும் குடி தண்ணீருக்கும் போராடினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூடக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் சினிமாக்காரர்கள் நினைத்த மாத்திரத்தில் முதல்வர்களைச் சந்திப்பார்கள்; கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வார்கள்.**

**இந்நாள் முதல்வர், முன்னாள் முதல்வர், முன்னாளுக்கு முன்னாள் முதல்வர் ஆகிய அனைவரும் மேற்படி தொழிலிலிருந்து வந்தவர்கள் என்பதால் மேற்படித் தொழில்மீது அவர்களுக்கு அப்படியொரு சகோதர பாசம்!**

**சினிமாத் தொழில் நசித்துப் போய் புதுப்படம் எதுவும் வராமல் போனால் ''ஏன் புத்தாண்டுக்குப் புதுப்படம் வரவில்லை?'' என்று யாராவது அரசைக் கேட்கப் போகிறார்களா என்றால் இல்லை. இருந்தாலும் கோயிலில் ஆறு காலப் பூசையும், கொட்டகையில் நாலு ஆட்டம் சினிமாவும், பிராந்திக் கடையில போதுமான கூட்டமும் இருந்தால் தானே தமிழகம் அமைதிப்பூங்காவாக நீடிக்க முடியும்.**

**தமிழக அரசியல் தலைவர்கள் திரையுலகத்தினர் மீது காட்டும் கரிசனைக்கு இன்னொரு காரணமும் உண்டு. ''இந்தத் தொழில் நசிந்து போனால் எங்களுக்கு வேறு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாதே'' என்று சினிமாக்காரர்கள் தங்களது வழக்கமான உருக்கமான வசனத்தை எடுத்து விட்டால் தமிழக முதல்வர்கள் உடனே கரைந்துருகி விடுகிறார்கள்.**

**ஓட்டுப் பொறுக்கி பிழைப்பு வாதிகள், சினிமா நட்சத்திரங்கள், பிக்பாக்கெட்டுகள், சாராய வியாபாரிகள், கந்து வட்டிக் காரர்கள் போன்றோர் வேறு தொழிலுக்கு மாறிக் கொள்வது சிரமம்தானே!**



படிப்பகம்

www.padippakam.com

# மே நாள்:
# கொண்டாட்டமல்ல போராட்டம்!

கவச உடையணிந்த 6000 போலீசார், வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த 4 ஹெலிகாப்டர்கள் — லண்டன் நகரில் மே நாள் ஆர்ப்பாட்டத்தை எதிர் கொள்வதற்கு பிரிட்டிஷ் அரசு செய்திருந்த ஏற்பாட்டுக்கு இது ஒரு சான்று. சென்ற ஆண்டு மே நாள் ஆர்ப்பாட்டத்தின் போது உலக வங்கியும் பன்னாட்டு நிறுவனங்களும் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டதனால் இந்த ஆண்டு மேநாள் ஊர்வலத்திற்கே தடை விதித்திருந்தது பிரிட்டிஷ் அரசு.

பிரிட்டன் மட்டுமல்ல, உலகமயமாக்கத்திற்கெதிரான தன்னெழுச்சியான போராட்டங்கள் அதிகரித்து வருவதால் கலக்கமடைந்துள்ள எல்லா முதலாளித்துவ நாடுகளுமே, தாங்கள் பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் கருத்துச் சுதந்திரம் ஜனநாயக உரிமை ஆகியவற்றை ரத்து செய்யத் தொடங்கிவிட்டன.

ஐரோப்பாவிலேயே சிறந்த ஜனநாயகம் என்று கூறப்படும் சுவிட்சர்லாந்தில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் ரப்பர் தோட்டாக்களும் தொழிலாளர்களை எதிர்கொண்டன.

இருப்பினும் உலகமயமாக்கமும் மறுகாலனியாக்கமும் அமெரிக்காவின் உலக மேலாதிக்க நடவடிக்கைகளும் உலகெங்கும் மே நாள் ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெறும் மக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வருகிறது. செய்தி ஊடகங்களின் திட்டமிட்ட இருட்டடிப்புகளை மீறி வெளிவந்து கொண்டிருக்கும் மே நாள் போராட்டச் செய்திகளைத் தொகுத்துத் தருகிறோம்:

உலகமயமாக்கம் தோற்றுவித்துள்ள வேலையில்லாத் திண்டாட்டம் ஐரோப்பிய நாடுகளையும் பிடித்தாட்டுகிறது. வேலையில்லாத ஐரோப்பிய இளைஞர்களின் கோபத்தை அகதிகளுக்கு எதிராகவும், வெளிநாட்டிலிருந்து குடியேறியுள்ள தொழிலாளர்களுக்கெதிராகவும் திருப்புகின்றன பாசிஸ்டு கட்சிகள்.

பிரான்சின் அதிபர் தேர்தலில் முதல் சுற்றில் 17 சதவீத வாக்குகளைப் பெற்ற பாசிஸ்டு லி பென்னுக்கு எதிராக அந்நாடே கிளர்ந்தெழுந்தது. 10 முதல் 15 லட்சம் பிரெஞ்சு மக்கள் மே நாள் ஆர்ப்பாட்டத்தையே பாசிச எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக நடத்தியிருக்கின்றனர்.

பெர்லினில் நாஜி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் போலீசுடனான மோதலில் முடிந்தது. இத்தாலியில் தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பை ரத்து செய்யும் சட்டத்தைக் கொண்டு வரும் பெர்லுஸ்கோனியின் அரசுக்கெதிராக வரலாறு காணாத அளவில் 10 லட்சம் மக்கள் ரோம் நகரில் சென்ற மாதம் ஆர்ப்பாட்டம் நடத்தினர் (அட்டைப்படம்). மே நாளன்று 5 லட்சம் மக்களின் ஆர்ப்பாட்டம் நடந்தது.

தென் கொரியாவின் சியோல், இந்தோனேசியா, ஈக்வடார் ஆகிய நாடுகளில் ஐ.எம்.எஃப் நிபந்தனைகளுக்கு எதிராகவும், தனியார்மயத்திற்கெதிராகவும் ஆயிரக்கணக்கான மக்கள் முழங்கினர். கோலாலம்பூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தோட்டத் தொழிலாளர்களின் மீதான கொடூரமான சுரண்டலை எதிர்த்துக் குரல் கொடுத்தது.

அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வின் சிறந்த பண்புகள் வெளிப்பட்டன. ''பன்னாட்டு மூலதனத்துக்கு நாட்டெல்லைகள் தடையில்லை, ஆனால் உழைப்புக்கு (தொழிலாளிக்கு) மட்டும் தடை உண்டு'' என்று கூறி ஏழை நாட்டுத் தொழிலாளர்களைச் சுரண்டும் அநீதியை எதிர்த்தன இந்த ஆர்ப்பாட்டங்கள். லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் 10,000 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் கணினித் தொழிலின் தோட்டத் தொழிலாளிகளான ஆசிய மக்களுக்காகக் குரல் கொடுத்தது. பாஸ்டனில் மே தினத் தியாகிகளைப் போற்றும் கலைநிகழ்ச்சிகள் நடந்தன; சிலியிலிருந்து வந்த புரட்சிப் பாடகர்கள் தமது மொழியில் புரட்சிப் பாடல்களைப் பாடினர்.

சட்ட விரோதமாகக் குடியேறியவர்களை அடைத்து வைத்திருக்கும் தனியார் சிறைச் சாலைகளை முற்றுகையிட்டனர் சிட்னி, மெல்போர்ன் ஆர்ப்பாட்டக்கா

## ம.க.இ.க, வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு இணைந்து நடத்திய
## மே நாள் ஆர்ப்பாட்டங்கள்

நாட்டை மீண்டும் காலனியாக்காதே!
இந்திய அரசே
உலக வர்த்தகக் கழகத்திலிருந்து
வெளியேறு!



**திருவாரூர்:**
**'விவசாயத்தை அழிக்காதே' - பேரணி**

என்ற முழக்கங்களை முன்வைத்து ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. - ஆகிய அமைப்புகளின் சார்பில் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

மே நாளன்று

''விவசாயத்தை அழிக்காதே'' என்ற முழக்கத்தின் கீழ் **திருவாரூரிலும்**

''கைத்தறி விசைத்தறித் தொழில்களை அழிக்காதே'' என்ற முழக்கத்தின்கீழ் **ஈரோட்டிலும்**

''பொதுத்துறையைத் தனியாருக்கு விற்காதே'' என்ற முழக்கத்தின் கீழ் **நெய்வேலியிலும்**

ஆர்ப்பாட்டம், பேரணி, பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

ஏப்ரல்-29 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அந்நியத் துணி எரிப்புப் போராட்டம் மக்கள் அனைவரின் ஆதரவையும் பெற்றது.

●○●



படிப்பகம்

www.padippakam.com

ரர்கள். "இந்தக் கைதிகளை விடுதலை செய்வதும், இசுரேலின் பிடியிலிருந்து பாலஸ்தீனத்தை விடுதலை செய்வதும் ஒரே தன்மையுள்ள கோரிக்கைகள்தான். இரண்டும் ஒரே போராட்டம்தான். காலனியாதிக்கத்திற்கும் உலக முதலாளித்துவத்திற்கும் எதிரான போராட்டமே அது" என்று முழங்கினார் ஒரு இளம் பெண்.

பாலஸ்தீன, ஆப்கான் அகதிகள், ஆஸ்திரேலியாவில் வெள்ளையர்களால் நசுக்கப்பட்ட பழங்குடி மக்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் என பல்வேறு தரப்பினர் இந்த முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார்கள்.

கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்சில் நான்கு பெரும் பேரணிகள் அமெரிக்க, இசுரேல் தூதரகங்களை முற்றுகையிட்டன. துருக்கி- இஸ்தான்புல்லில் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இசுரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் நேட்டோவின் போர்வெறிக்கெதிராகவும் குரல் கொடுத்தனர். குர்த் இன மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் உரைநிகழ்த்தப்பட்டது.

சென்ற ஆண்டு மிகப்பெரிய ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்திய கோதன்பர்க் நகரில் (ஸ்வீடன்) இந்த மே தினத்தில் பல சர்வதேசப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தண்ணீரைத் தனியார் மயமாக்குவதற்கு எதிரான தங்கள் போராட்டத்தை பொலிவிய நாட்டின் பிரதிநிதி விளக்கியபோது கூடியிருந்த 8000 பேரும் வாழ்த்தி முழக்கமிட்டனர்.

தொழிலாளர் இயக்கங்களோ, கம்யூனிசத்தின் வாசனையோ கூடக் கிடையாது என்று மார்தட்டிக் கொள்ளும் 'தூய' முதலாளித்துவ நாடான ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கோரப்பிடியில் சிக்கிய 35,000 தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினர். 'தூய' இசுலாமிய நாடான ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் ஆயத்த ஆடைத் தொழிலாளர்கள் 5000 பேர் "தங்களுக்கு 14 மாதமாகச் சம்பளம் தரவில்லை" என்ற கொடுமையை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினர்.

தென் அமெரிக்க, மத்திய அமெரிக்க நாடுகள் அனைத்திலும் அமெரிக்கத் தலையீட்டுக்கு எதிராக முழங்கினர் மக்கள். சிலியின் தலைநகர் சாண்டியாகோவில் நகரெங்கும் செங்கொடிகள் உயர்ந்தன. அமெரிக்கக் கொடிகள் எரிந்தன. போதை மருந்து ஒழிப்பு என்ற பெயரில் கம்யூனிஸ்டு கொரில்லாக்களை ஒழிப்பதற்காக அமெரிக்கா திட்டமிட்டுள்ள இராணுவத் தலையீட்டுக்கு எதிராக முழங்கினர் கொலம்பிய மக்கள்.

வெனிசுலாவில் சி.ஐ.ஏ. சதியால் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஆளாகி, மீண்டும் மக்கள் ஆதரவுடன் அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும் 'சாவேஸ்'க்கு ஆதரவாகவும் அமெரிக்கத் தலையீட்டுக்கு எதிராகவும் வெனிசுலாவின் தலைநகர் காரகாஸில் ஒரு லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

1959 கியூபா புரட்சிக்குப் பின் நடைபெற்ற மிகப்பெரிய மே நாள் ஆர்ப்பாட்டம் இதுதான் என்று கூறுமளவு அங்கே நாடெங்கும் ஒரு கோடி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்ற போர்வையில் கியூபாவில் தலையிடும் அமெரிக்க வல்லரசின் சதியைச் சாடி, "இந்த உலக மேலாதிக்க ரவுடித்தனத்திற்குப் பணிய மாட்டோம்" என்று முழங்கினார் காஸ்டிரோ.

அமெரிக்காவின் தென் முனையில் இந்தக் கலகக்குரல் ஒலித்த அதே நேரத்தில், தென்கிழக்காசியாவின் தென் முனையான பிலிப்பைன்சில் அமெரிக்க இராணுவத்தளத்தை வெளியேற்றக் கோரி மணிலாவில் முழங்கினர் மே நாள் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

மாஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் ஒன்றரை லட்சம் தொழிலாளர்களும் கார்ல் மார்க்ஸ் சதுக்கத்தில் ஒரு லட்சம் தொழிலாளர்களும் அணி வகுத்தனர். ரசியாவெங்கும் 500 நகரங்களில் மே நாள் பேரணிகள் நடைபெற்றதாகச் செய்திகள் கூறுகின்றன. வோரோனே நகரில் லெனின் சிலையின் கீழே ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த தொழிலாளர்கள் ரசிய மக்களின் உள்ளக் குமுறலை முழக்கமாக வெளியிட்டனர். "தந்தையர் நாட்டின் துரோகிகள் ஒழிக!" "முதலாளித்துவச் சர்வாதிகாரம் ஒழிக!"


ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள், போலீசுடனான மோதல்கள், துப்பாக்கிச் சூடுகள் போன்ற போர்க்குணமிக்க வடிவங்களில் மட்டுமின்றி சாதாரண மக்கள் தமக்கேயுரிய எளிய முறையிலும் தமது அரசியல் முழக்கத்தை எதிரிகளுக்குத் தெரிவித்தனர்.

லண்டன் நகரையே ஆக்கிரமித்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் உணவு விடுதிகளுக்கு எதிராக ஒரு வயதான பிரிட்டிஷ் தம்பதியர் தமது எதிர்ப்பை இப்படித் தெரிவித்தனர். அமெரிக்க உணவு விடுதியின் வாசலில் நின்று வெள்ளரிப் பழத்தையும், தேநீரையும் மலிவு விலையில் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்தார்கள் அந்த முதியவர்கள். அது உலக முதலாளித்துவத்திற்கெதிராக அவர்கள் எழுப்பிய மவுனமான போர் முழக்கம்!


## ம.க.இ.க.வின் பாடல், பேச்சு ஒலிப்பேழைகள்






**அடிமைச்சாசனம்**
மறுகாலனியாக்கத்திற்கெதிரான பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை

**காவி இருள், அசுரகானம்**
பார்ப்பன இந்துமதவெறிக்கு எதிரான
போர்க்குணமிக்க பாடல்கள்

பாடல் ஒலிப்பேழை
ஒவ்வொன்றின் விலை: ரூ. 35
(அஞ்சல் செலவு தனி)

**குஜராத் படுகொலையைக் கண்டித்து...**
தஞ்சை பொதுக்கூட்ட உரை
***தோழர். மருதையன்***
இரண்டு பேழைகள் விலை: ரூ. 60
(அஞ்சல் செலவு தனி)

*கிடைக்குமிடம்:*
**இரா. சீனிவாசன்**
**18, முல்லைநகர் வணிக வளாகம்**
**2-வது நிழற்சாலை, அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**
**தொலைபேசி: 3718706**



படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்:
# நொறுக்கப்பட்ட மக்கள்




இந்தப் புத்தகத்தின் பெயர் **'நொறுக்கப்பட்ட மக்கள்'.** மனித உரிமைக் கண்காணிப்பு என்ற சர்வதேசத் தொண்டு நிறுவனத்தின் தெற்காசியப் பிரிவின் ஆய்வாளர் 'ஸ்மித்தா நெருல்லா' என்பவரால் கள ஆய்வாகப் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டிருக்கிறது இந்நூல். நாடு முழுக்க தீண்டத்தகாத மக்களை நொறுக்கும் சாதி வெறியில் தேசிய ஒருமைப்பாடு நிரம்பி வழிவதை இந்நூல் ஏராளமான புள்ளி விவரங்களுடன் படிப்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

மகாராஷ்டிரா, பீகார் போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் போராடும் மார்க்சிய லெனினியக் குழுவினர் மீது ஆதிக்கச் சாதி வெறியர்கள் ஏவிவிடும் படுகொலைகளை சில இடங்களில் படங்களுடன் ஆதாரப்படுத்தியுள்ளது இந்நூல். அதுமட்டுமல்லாது ஆதிக்கச் சாதி வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட சட்டமும், போலீசும், முழுக்க முழுக்க ஆதிக்கச் சாதி வெறியர்களோடு சேர்ந்து கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மேலேயே ஏவிவிட்ட சம்பவங்களை ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்குகிறது இந்நூல்.

அறிந்து கொள்ள வேண்டிய தகவல்களைப் பெறுவதற்கு மட்டும் இந்த நூலைப் பயன்படுத்த முடியும். இந்த அநியாயங்களைத் தட்டிக் கேட்பதற்கான தார்மீக பலத்தை சமூகக் களத்தில் சமரசமில்லாமல் இயங்கும் புரட்சிகர அமைப்புகளிடமிருந்து மட்டுமே பெற முடியும் என்பதை இந்தப் புத்தகத்தின் ஒரு பகுதி வாசகமே ஒப்புதல் வாக்குமூலமாய் உறுதி செய்கிறது.

''தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம், தேசிய மனித உரிமை ஆணையம், தேசியக் காவல் ஆணையம் மற்றும் தன்னார்வக் குழுக்கள் ஆகிய அனைவரது ஒன்றுபட்ட கருத்துப்படி குற்றமிழைப்போர் தண்டனையிலிருந்து தப்பிவிடுகிறார்கள் என்பதாகும்.''

*(இந்நூல் பக்: 14)*

**● சித்தன்**

*வெளியீடு :*
**மக்கள் கண்காணிப்பகம்,**
**தமிழ்நாடு.**

*கிடைக்குமிடம் :*
**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை,**
**சென்னை - 2.**
**தொ.பேசி: 044-8412367**

*நூல் விலை :*
**ரூ. 100/- (பக்கம்: 388 + VI)**

## திருச்சி நீதிபதியின் சாதிவெறி:
# கார் டிக்கியில் கத்தி நீதிமன்றத்தில் சுத்தி!

**வ**ன்கொடுமைத் தடுப்புச் சட்டம், அதை அமல்படுத்துவதற்கான நீதிமன்றம் ஆகியவற்றின் கையில் சிக்கிப் பல அப்பாவிகள் அவதிப்படுவதைப் போல சித்தரிக்கிறார்கள் சாதிவெறியர்கள். ஆனால் பல இடங்களில் நீதிபதிகளே கடைந்தெடுத்த சாதி வெறியர்களாக இருக்கின்றனர். மார்ச் 12-ம் தேதியன்று திருச்சி நீதிமன்றத்தில் நடந்த சம்பவம் இது:

ஆர். சின்னதுரை என்ற தலித் வழக்குரைஞர் அவர் படித்துக் கொண்டிருந்தபோதே நாயுடு சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். பெண்ணின் உறவினர்கள் சிலர் தலையிட்டு சாதிய காரணங்களால் பெண்ணைப் பிரித்து விட்டனர்.

தன்னுடைய மனைவியைத் தன்னுடன் வாழ உத்திரவிடும்படி வழக்குப் போட்டிருந்தார் சின்னதுரை. 12.3.2002 அன்று திருச்சி முதன்மை சார்பு நீதிமன்ற நீதிபதி பி.டி. செல்வம் ''நீயெல்லாம் பிராமணப் பெண்ணைக் கல்யாணம் செய்ய ஆசைப்படுகிறாயா?'' என்று கேட்டு நீதிமன்றத்திலேயே சின்னதுரையை அவமானப்படுத்தினார்.

நீதிபதியைக் கண்டித்து திருச்சி நீதிமன்ற வழக்குரைஞர்களுடன், ம.க.இ.க.வும் பல்வேறு தலித் அமைப்புகளும் இணைந்து மார்ச் - 26-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தினர். உயர் நீதிமன்ற வழக்குரைஞர் ரத்தினம் தலைமை தாங்கினார். நீதிபதியைக் கைது செய்யக் கோரி சுவரொட்டி ஒட்டிய ம.க.இ.க. தோழர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

சாதிவெறி பிடித்த பி.டி. செல்வம் ஒரு ஊழல் பேர்வழி. புதுக்கோட்டையில் நீதிபதியாக இருந்தபோது அங்குள்ள வக்கீல்கள் சங்கம் இந்த நீதிபதிக்கெதிராக ஊழல் புகார் கொடுத்துள்ளது. ஊழல் குற்றம் சாட்டப்பட்டவுடனே ''நான் தேவன்டா, என்னை ஒண்ணும் புடுங்க முடியாது. என் கார் டிக்கியை திறந்து பார். கத்தி, அரிவாள் எல்லாள் ரெடியா இருக்கும்'' என்று வீர உரையாற்றினாராம் அந்த நீதிபதி.

சாதிவெறியனும் ஊழல் பேர்வழியுமான இந்த 'நீதி'பதி மீது உயர் நீதிமன்றத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுவரை நடவடிக்கை எதுவும் இல்லை. கார் டிக்கியில் அரிவாளையும், சிந்தனையில் சாதிவெறியையும் வைத்திருக்கும் 'சட்டத்திற்கு உட்பட்ட குடிமகனான நீதிபதி' மக்கள் மீது சட்டத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார். ●

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

(TAMIL MONTHLY)
FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/Chief PMG - 303 / 2002

www.padippakam.com

# உலகைக் குலுக்கிய மே நாள் !




ஈரோடு: அந்நியத் துணி எரிப்பு



ஈகுவேடார் : அமெரிக்கக் கொடி எரிப்பு



காஸ்டாரீகா : ஏகாதிபத்திய எதிர்ப்பு - பாலஸ்தீன ஆதரவு



நெய்வேலி : பொதுத்துறையைத் தனியாருக்கு விற்காதே!



மெக்ஸிகோ : விவசாயிகளின் ஆயுதப்படை



காரகாஸ் : முழக்கமிடும் பெண்

படிப்பகம்